# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 256 ஆடி 27 ஆம் நாள் திங்கட்கிழமை 12 ஒகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### மீண்டும் வெள்ளை வான் யுகம் வேண்டுமா?

கேட்கிறார் ரணில்

கொழும்பு, ஓக. 12
வெள்ளை வான் கலாசாரத்துக்கு நாமே முடிவு கட்டினோம். வீழச்சியடைந்த பொருளாதாரத்துக்

03

# எனது சகோதரனை உங்களுடைய சகோதரனாக ஒப்படைக்கின்றேன்



## கோத்தாவை அரச தலைவர் வேட்பாளராக அறிவித்து மகிந்த நாட்டு மக்களுக்கு உரை

கொழும்பு, ஒகஸ்ட் 12

மக்கள் கூறியவற்றை அவதானத்தில் கொண்டு புதிய ஒருவரைத் தேடினேன். நான் தெரிவு செய்யாவிடினும் கோத்தபாய ராஜபக்ச உங்களது சகோதரர் ஆகிவிட்டார். எனவே கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்கத் தயார். என்னுடைய சகோதரனை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன். கோத்தபாய எப்போதும் தன்னை அரச தலைவர் வேட்பாளராக்குமாறு கேட்டுக்கொள்ளவில்லை. கோத்தபாயவை வலுப்படுத்துவதற்காக அவரை நியமிக்கவில்லை. இவ்வாறு முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

03

### ஏ-9 வீதி மூடப்பட்டு போர் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 13ஆண்டுகள்

யாழ்ப்பாணம், ஓக. 12
ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டு இறுதிக் கட்டப்போர் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 13ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி

03

### மைத்திரி புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 12
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப் படும் நிகழ்வில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்கவில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில்

03

### ஆயிரம் கோத்தபாயாக்கள் களமிறங்கினாலும் தேர்தலில் ஐ.தே.க. வெற்றியீட்டுவது உறுதி

அடித்துக் கூறுகின்றார் ரணில்: தமது வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12
அரச தலைவர் தேர்தலில் ஆயிரம் கோத்தபாயாக்கள் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரே வெல்

19

### கோத்தாவை வேட்பாளராக அறிவித்தார் மகிந்த ராஜபக்ச

சுகததாச அரங்கு அதிர்ந்தது



கொழும்பு, ஓக. 12
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு சுகத

03

### தமிழை ஒதுக்கிய பொதுமக்கள் முன்னணி

கொழும்பு, ஓக. 12
அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவை அறி

03



### கையை விட்டு மொட்டுக்கு தாவினார் மகிந்த ராஜபக்ச

யாழ்ப்பாணம், ஓக. 12
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவரும் குருநாகல்

03

கோத்தாவை வேட்பாளராக அறிவிக்க முன்னர்

### மகிந்தவை அவசர அவசரமாக சந்தித்த அமெரிக்க அதிகாரிகள்



19

யாழ்ப்பாணத்தில்

### கோத்தா ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி ஆரவாரம்



03

## இலங்கையின் இறையாண்மையில் கைவைக்க யாரையும் அனுமதியேன்

வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கோத்தா உரை

19

### வடமராட்சி நீரேரியை மையப்படுத்திய குடாநாட்டுக்கான மாற்றுக் குடிநீர்த் திட்ட பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பம்

மைத்திரிபால தொடக்கி வைப்பார்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடி தண்ணீர்ப்பிரச்சினைத் தீர்வுக்காக தயாரிக்கப்

03

### கோத்தா வேட்பாளராவது தொடர்பில் சமூகவலைத் தளங்களில் விமர்சனம்

யாழ்ப்பாணம், ஓக. 12
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக நேற்று அறிவிக்கப்பட்டார்.

03

### கோத்தபாய மோசமான மனிதர் அல்லர் சிறுபான்மை மக்கள் வாக்களிப்பார்கள்

இந்திய ஊடகத்துக்கு கூறினார் மகிந்த

யாழ்ப்பாணம், ஓக. 12
சிறுபான்மை மக்கள் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிப்பார்கள். அவர் (கோத்தபாய) மோசமான

19


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்

பொதிகள் சேவை

COURIER Services

- ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
- பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
- அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை

20 வருடகால அச்சுத்துறை அனுபவம்

இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...

Harikanan Express

கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

021 222 2737



# உங்கள் நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்

## அச்சுவினி:

புத்திக் கூர்மை, வடிவான தோற்றம், ஆடை ஆபரணங்கள் அணிவதில் ஆசை, பாசம், நேசம், கோபதாபங்கள். உணர்ச்சிவசப்படுதல், தன்னம்பிக்கை, துணிச்சல், தர்ம சிந்தனை, பயமின்மை, எதையும் வேகமாகச் சிந்தித்து வேகமாகச் செயல்படுதல், தற்பெருமை, கர்வம், தவறான முடிவெடுத்தல் - சாதிக்கும் தன்மை, பிடிவாதம் போன்ற குணங்கள் இவர்களிடம் காணப்ப டும்.

உயரிய மன உறுதியும் உடல் வலிமையும் ஒருங்கே கொண்டவர்களாக இருப்பார்கள். எந்த வேலையைத் தொடங்கினாலும் அதைச் சிறப்பாக முடித்து விட்டு தான் மறுவேலை பார்ப்பார்கள். கூர்மையான அறிவாற்றலும் சிந்தனை திறனும் இருக்கும். இந்த நட்சத்திரக்காரர்களின் கண்களில் எப்போதும் பிறரை ஈர்க்கும் ஒரு கவர்ச்சி இருக்கும். எந்தக் காரணத்துக்காகவும் சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள்.

எதிலும் முதலிடத்தில் இருக்க விரும்புவீர்கள். எந்த ஒரு விடயத்தையும் ஆராய்ந்த பிறகே ஏற்றுக்கொள்வார்கள். நெருக்கமான நண்பர்கள் என ஒரு சிலர் மட்டுமே இருப்பார்கள். பல மொழிகளை கற்றறியும் திறன் இருக்கும். செய்கின்ற பணிகளில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பார்கள். இவர்களை தேடி உயரிய பதவிகள் வரும். தங்களின் குழந்தைகள் மீது மிகுந்த பாசம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆன்மிகப் பணிகளில் அதிகம் ஈடுபடுவீர்கள். தீர்க்காயுள் உண்டு.



அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த நீங்கள் எதிலும் முதலிடத்தில் இருக்கவே விரும்புவீர்கள்.

அஸ்வினி நட்சத்திரத்துக்குரிய அச்சுவினி தேவர்கள் தேவலோக மருத்துவர்கள் என்பதால் ஒரு சிலர் மருத்துவத் துறையிலும் சிறந்து விளங்குவார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்குபவர்கள் மற்றும் இவர்களுடைய உழைக்கும் சக்தி மற்றும் கவனம் முழுவதையும் வேலையில் ஈடுபடுத்தி வெற்றிபெறுவார்கள்.

எதிலும் வேகமாகச் செயற்பட துடிப்பவர்கள். தீயணைப்பு, அறுவை சிகிச்சை மருத்துவம் ஆராய்ச்சி போன்ற துறையில் ஆர்வம் மிகுந்தவர்கள். எப்பொழுதும் ஏதாவது ஒரு செயலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பார்கள். அமைதியாக ஒரு இடத்தில் அமர்ந்து இருப்பது என்பது இவர்களுக்கு ஒத்துவராது.

## பரணி

வசீகரமான தோற்றம், உயர்வாக வாழத் துடிப்பு, சுகபோகத்தை அனுபவிக்க விருப்பம், சுயநலம், தோல்வியைத் தாங்கமுடியாத பயம், பாசமும் நேசமும் உள்ள பண்பு ஆகியவை இந்த நட்சத்திரத்துக்குரிய பொதுவான குணங்களாகும். பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், சுகபோகங்களுக்கும் கலைக்கும் உரிய கிரகமான சுக்கிரனின் ஆதிக்கத்துட்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

மேலும் பூமிக்காரகன் செவ்வாயின் ராசியில் பிறந்திருப்பதால் எந்த ஒரு விடயத்திலும் தனித்து செயல்படவே விரும்புகிறவர்களாகவே இருப்பார்கள். பரணி நட்சத்திரக்காரர்களுக்கு பிறருக்கு தானம் தருமம் செய்வதில் விருப்பம் அதிகம் எனவே. தான் கஷ்டப்படுகிற நிலையிலும் தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல், வாழ்வில் நலிவடைந்தவர்கள் மற்றும் துயருற்றவர்களுக்கு ஆறுதல் சொல்வதுடன் கையில் இருப்பதையும் கொடுத்து உதவும் மனிதநேயம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

பெற்றோர்கள் மீது மிகுந்த மதிப்பும், பாசமும் கொண்டிருப்பார்கள். அவர்களின் இறுதி காலம் வரை நன்கு பராமரிப்பார்கள்.

தொடங்கிய எந்த ஒரு காரியத்தையும் அது முடியும் வரை விடா முயற்சி மற்றும் மன உறுதியுடன் செயல்பட்டு வெற்றி, புகழ் ஈட்டுவார்கள். பொதுவாகபரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அரசனைப் போல் அல்லது அரசனுக்கு நிகரான சுகபோக வாழ்க்கையை வாழ்வார்கள்.

'பரணி தரணி ஆளும்' என்ற பழமொழிக்கு ஏற்ப பரணி நட்சத்திரக்காரர்கள் அரச மற்றும் இதர பணிகளிலும் அதிகபட்ச அதிகாரங்கள் பெற்ற பதவியில் அமர்வார்கள். சிறந்த ஆளுமை மற்றும் நிர்வாக திறன் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். சூழ்நிலை மற்றும் மனிதர்களின் தன்மைகளுக்கேற்ப செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பார்கள்.

மற்றவர்கள் கடுமையான வார்த்தைகளை பிரயோகித்தாலும், நடத்தைகளை வெளிப்படுத்தினாலும் அமைதியிழக்காமல் சூழ்நிலையை கச்சிதமாக கையாள்வார்கள். கலாரசனை மிகுந்த சுக்கிர பகவானின் ஆதிக்கத்தில் பரணி நட்சத்திரக்காரர்கள் இருப்பதால் இசையில் மிகுந்த ஈடுபாடு இருக்கும். மேலும் ஓவியம், நாட்டியம் போன்றவற்றில் தங்களையே மறந்து விடும் அளவிற்கு ஈடுபாடு மற்றும் திறமைகளை கொண்டிருப்பார்கள். நடை, உடை, பாவனையில் ஒரு தனி தன்மை இருக்கும்.

# தீராத பாவங்களை போக்குவதற்கு இதைச் செய்ய வேண்டுமாம்...!

எம் முன்னோர்கள் எத்தனை செய்தாலும் அதற்கு பின் ஒரு அறிவியல் உண்மை இருக்கும் என்பதை கண்கூடாகப் பார்க்க முடியும். ஏழு ஜென்ம பாவங்களையும் கூட பச்சரிசி கொண்டு தீர்க்க முடியும் என்கிறது ஐதீகம்.

சனிக்கிழமை நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா..?

சனிக்கிழமையன்று விடியற்காலை எழுந்து குளித்து விட்டு தூய்மையாக கையில் கொஞ்சம் பச்சரிசியை எடுத்துக்கொண்டு , அப்படியே சூரிய பகவானை பார்த்து வணங்கிவிட்டு, பின்னர் அதே அரிசியை கையில் வைத்துக்கொண்டு விநாயகரை மூன்று முறை சுற்றி வர வேண்டும்.






அப்போது கையில் இருக்கும் பச்சரிசியை தூவி விட அதனை எறும்பு முழுவதுமாக எடுத்துச் சென்று விட்டால் நம்முடைய ஏழு ஜென்ம பாவங்கள் அனைத்தும் தீர்ந்து விடும் என்கிறது ஐதீகம்.

கோவில் சுற்றும்போது நாம் தூவிய பச்சரிசியை எறும்புகள் இழுத்து சென்று மழைக்காலத்தில் சாப்பிடும். இந்த உணவை சாப்பிட்டு முடிக்கவே எறும்புகளுக்கு இரண்டரை ஆண்டு காலம் ஆகுமாம். இந்தக் காலத்தில் எறும்புகளின் செயற்பாடும் அந்த உணவை எறும்பு சாப்பிடுகிறதா என முப்பத்து முக்கோடி தேவர்களும் கவனித்துக்கொண்டே இருப்பார்களாம்.

அதாவது எறும்பின் எச்சில் அந்த பச்சரிசி மீது படும் போதே அந்த அரிசி கெடாமல் சில ஆண்டுகள் இருக்கும். இதன்மூலம் மிகக்கொடுமையான விளைவுகளைத் தரக்கூடிய அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி, ஏழரைச்சனி, கண்ட சனி ஆகியவற்றால் உண்டாகும் எந்த ஒரு தீங்கும் நம்மை அண்டாமல் இருக்குமாம்.

அதனால் தான் நம் முன்னோர்கள் எறும்புகளுக்கு அவ்வப்போது தேவையான **அரிசி மற்றும் சில உணவு வகைகளை தூவி விடுவார்கள்.**

# ஆயுள் ரேகை...




உயிர்கள் அனைத்துக்குமே உயிர்வாழும் வேட்கை இயற்கையானதே.

அதிலும் பல வகையான இன்பங்களை அனுபவிக்க ஆசைகள் அதிகம் கொண்ட மனிதர்களுக்கு நீண்ட காலம் உயிர் வாழும் ஆசை அதிகம்.

அப்படி ஒரு மனிதன் நீண்ட காலம் வாழ்வதை பற்றி கூறும் ரேகை தான் "ஆயுள் ரேகை". இந்த ஆயுள் ரேகையைப் பற்றிய சில பொதுவான விடயங்களை இங்கு தெரிந்து கொள்வோம்.

இந்த ஆயுள் ரேகை ஒரு நபரின் ஆட்காட்டி மற்றும் கட்டை விரலுக்கு நடுப்பகுதியிலிருந்து அந்த கட்டை விரலின் அடிப்பகுதி வரை செல்லும் ரேகை ஆயுள் ரேகையாகும்.

இந்த ஆயுள் ரேகை நல்ல நிறத்தில், பின்னல்கள் ஏதுமின்றி கையின் மணிக்கட்டு வரை நீண்டிருந்தால் அந்த நபருக்கு குறைந்தது 80 முதல் 100 ஆண்டுகள் வரையான ஆயுள் உண்டு. ஆயுள் ரேகை இடையிடையே மெலிந்தும், தொடர்பின்றியும் காணப்பட்டால் அந்த நபர் பல விதமான உயிருக்கு ஆபத்தான கண்டங்களை எதிர் கொள்வார்.

ஆயுள் ரேகையில் வேறு ஏதேதேனும் ரேகைகள் குறுக்கிட்டால் அந்த நபருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏதேனும் ஒரு வகை கஷ்டம் உண்டாகும்.

ஆயுள் ரேகை அதிக நீளமுள்ளவர்களுக்கு அதிக சந்ததிகள் பிறக்கும் அமைப்பு இருக்கும்.

ஆயுள் ரேகை மிக மெலிதாகவும், லேசாகவும் இருந்தால் அந்த நபர் மிகவும் பலவீனராகவும், **அடிக்கடி நோய் வாய்ப்படுபவராகவும் இருப்பார்.**

## மீண்டும் ...

கும் புத்துயிர் கொடுத்தோம். மீண்டும் வெள்ளை வான் யுகத்தை நோக்கிப் பயணிக்கலாமா? இவ்வாறு கேள்வி எழுப்பினார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

குருநாகல் மாநகர சபை மண்டபத்தில் விவசாயிகளுக்கு வறட்சி இழப்பீடு வழங்கும் நிகழ்வு இடம்பெற்ற போது தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்ட பின்னரே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆடையையும், முகத்தையும் மாற்றுவதால் மட்டும் நாட்டில் மாற்றம் வரப்போவதில்லை. போர் முடிவடைந்த பின்னர்கூட 10 ஆண்டுகளாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியாதவர்களால் இனிவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அதை எவ்வாறு செய்ய முடியும்?, என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.5)

## கையை...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் கட்சியின் நிறுவுநர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கட்சியின் தலைவர் பதவிக்கு மகிந்தவைப் பரிந்துரைக்கும் யோசனையை முன்வைத்தார். அந்த யோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் அவருக்கு தலைமைத்துவப் பதவிக்கான சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக, அந்தக் கட்சியின் முன்னாள் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச, அங்கிருந்து வெளியேறி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் சதியைத் தொடர்ந்து, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையை மகிந்த ராஜபக்ச பெற்றுக் கொண்டார். இது தொடர்பான ஒளிப்படங்களும் வெளியாகியிருந்தன. இருப்பினும், அரசியல் சதி முறியடிக்கப்பட்டு ரணில் அரசு ஆட்சிப்பீடமேறிய பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று மகிந்த கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,22)

## தமிழை...

விக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நேற்றைய தேசிய மாநாட்டில், தமிழ் மொழி முற்றாகவே புறக்கணிக்கப்பட்டது.

மாநாட்டு மேடையில் தனிச் சிங்கள மொழியிலேயே எழுதப்பட்ட பதாகை வைக்கப்பட்டிருந்தது. மாநாட்டில், தமிழர் பிரதேசங்களிலிருந்து சென்றவர்களும் கலந்து கொண்டிருந்தபோதும், மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவின் உரைகள் சிங்கள மொழியில் மாத்திரம் இடம்பெற்றன. மொழி பெயர்ப்பு வழங்கப்படவில்லை. (ஒ.5)

## ஏ-9 வீதி...

மாலை, ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஆட்லறி செல் தாக்குதல் நடத்தப்பட்டது. நான்கு ஆண்டு கால சமாதானம் முறிவடைந்து மீண்டும் போர் ஆரம்பமாகியது. இதுவே இறுதிப் போருக்கு வழிவகுத்துச் சென்றது.

அப்போதைய அரச தலைவராக மகிந்த ராஜபக்சவும், பாதுகாப்பு அமைச்சின் செயலராக கோத்தபாய ராஜபக்சவும் செயற்பட்டிருந்தனர். (ஒ.5)

## கோத்தாவை...

தாச உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில், எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் அரச தலைவரும், கோத்தபாயவின் சகோதரருமான மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய மாநாடு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. மகிந்த ராஜபக்ச கட்சியின் தலைமைப் பொறுப்பை, பேராசிரியர் ஜீ.எல். பீரிசிடம் இருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதனையடுத்து, மாநாட்டில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச, சரியாக 4 மணியளவில், கோத்தபாய ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்துவதாக அறிவித்தார்.

அப்போது, திடீரென மாநாட்டில் பங்கேற்றிருந்தவர்கள் ஒரே நேரத்தில் பெரும் கரகோசம் எழுப்பி, கோத்தபாய ராஜபக்சவின் படங்களை உயர்த்திப் பிடித்தனர். இதையடுத்து, கோத்தாவை வரவேற்கும் பாடல் ஒலிக்கவிடப்பட்டது. உடனடியாக கோத்தபாய ராஜபக்ச வருகை தந்தார். மேடையில் ஏறியதும், மகிந்த ராஜபக்சவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று கொண்டார். இதன் பின்னர் இருவரும் கைகளை உயர்த்தி ஆதரவாளர்களை நோக்கி காட்டினர். சுகததாச உள்ளரங்கு கரவொலியாலும், கோசங்களாலும் அதிர்ந்தது.

இந்த மாநாட்டில் சுதந்திரக் கட்சியின் உத்தரவையும் மீறி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.திசநாயக்க, டிலான் பெரேரா, சரத் அமுனுகம ஆகியோர் பங்கேற்றிருந்தனர். கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், வடகிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். (ஒ.5,21)

## மைத்திரி...

கூட்டணிக்கான பேச்சு இடம்பெற்று வந்தது. அதில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில் சுதந்திரக் கட்சியினர் பங்கேற்கத் தேவையில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கம்போடியாவுக்குப் புறப்பட முன்னர் அறிவித்திருந்தார்.

அவரது அறிவிப்பை உதாசீனப்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நேற்றைய மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். கம்போடியாவிலிருந்து நாடு திரும்பிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மாநாட்டில் பங்கேற்கவில்லை. (ஒ.5,21)

## கோத்தா...

இதனையடுத்த சமூகவலைத் தளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் குடியுரிமை இல்லாமல் இருப்பவர்கள் விரைவில் குடியுரிமை பெற்றுக் கொள்வார்கள் என்றும், இங்குள்ளவர்கள் விரைவில் கடவுச் சீட்டு எடுத்துத் தயாராக வேண்டும் என்றும் பல பதிவிட்டுள்ளனர். கோத்தபாய அரச தலைவர் வேட்பாளராகப் பெயரிட்டமையால் மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் தோன்றும் என்றும் சமூக வலைத் தளங்களில் பதிவிடப்பட்டுள்ளது.

(ஒ.5)

## குடாநாட்டுக்கான...

பட்டுள்ள மாற்றுக் குடிதண்ணீர்த் திட்டப் பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்து இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவடைய வேண்டிய இந்தத் திட்டம் வன உயிரிகள் திணைக்களத்தின் முட்டுக் கட்டையால் ஓராண்டு தாமதமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப் பிரச்சினை நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. அதற்குப் பல்வேறு தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இரணைமடுவிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவருதல், வடமராட்சி கிழக்கிலிருந்து கடல் நீரை நன்னீராக்குதல் என்று பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டபோதும், அதிலுள்ள அரசியல் இழுபறிகள் காரணமாக எந்தவொரு திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் 'மாற்றுக் குடிதண்ணீர்த்திட்டம் என்ற பெயரில், வடமராட்சி நீரேரியில் உள்ள நீரை குளத்தில் தேக்கி விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது. 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் ஆறாவது மைல் கல்லுக்கும் ஒன்பதாவது மைல் கல்லுக்கும் இடையிலான பிரதேசத்தில், உப்பாறு நீரேரியில், கப்பூதுவெளி அந்தணத்திடல் பகுதியில் மிகப் பெரிய குளம் அமைக்கப்படவுள்ளது. இந்தக் குளம் 6 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும், 7.5 மீற்றர் உயரம் உடையதாகவும், குளத்தின் அணைக்கட்டு 4 மீற்றர் அகலம் உடையதாகவும் இருக்கும்.

வடமராட்சி நீரேரியிலிருந்து மழை காலத்தில் கடலுக்குச் செல்லும் நீர், சாவகச்சேரி பருத்தித்துறை வீதிக்கும், வல்லை வெளிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வடமராட்சி நீரேரியில், அணை அமைக்கப்பட்டு புதிய துருசு நிறுவப்பட்டு அங்கு தடுக்கப்பட்டு, குழாய்கள் மூலமாக அந்தணத் திடல் பகுதியிலுள்ள குளத்துக்கு நீர் இறைக்கப்படும்.

குளத்தில் 4.5 மீற்றர் உயரத்துக்கே இயந்திரம் ஊடாக இறைக்கப்பட்டு நீர் தேக்கப்படும். குளத்துக்கு நேரடியாகக் கிடைக்கும் மழை நீரும் அதனுள் தேக்கப்படும். குளத்தில் சராசரியாக ஆண்டுக்கு 24 எம்.சி.எம். நீர் சேமித்து வைக்கப்படும்.

வடமராட்சி நீரேரியில் மழை நீர் சேகரிக்கப்பட்டு எதிர்காலத்தில் அந்த நீரேரி நன்னீர் நீரேரியாக மாறும் வகையில் திட்டம் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனால் நாகர்கோவில் பிரதேசத்தில் மங்குரோஸ் தாவரங்கள் அழிவடையும் எனத் தெரிவித்து வனஉயிரிகள் திணைக்களம் அனுமதி வழங்காமல் இழுத்தடித்திருந்தது.

தற்போது நீரேரி ஊடாக கடலுக்குச் செல்லும் மேலதிக நீரையே குளத்துக்கு இறைக்கும் வகையில் திட்டம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் நீரேரியில் உள்ள நீர் வழமை போன்றே இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான அலுவலகம் சரசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை எதிர்வரும் 29ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ.5)

**வீடு வாடகைக்கு**
**(உடனடி வாடகைக்கு)**
மல்லாகம் புகையிரத
நிலையத்துக்கு அருகில் சகல
வசதிகளுடனும் கூடிய சுற்றுமதில்
கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
**077 199 9255, 077 763 1183**

## கோத்தா ஆதரவாளர்கள்...

யாழ்ப்பாணம், ஓக். 12

அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறுபகுதிகளிலும் குறிப்பாக தமிழ்மக்கள் அதிகமாகவாழும்பிரதேசங்களிலும் வெடி கொளுத்தப்பட்டது. மலையகப் பகுதிகளில் பாற் சோறு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில், கோத்தபாய மற்றும் மகிந்தவின் ஒளிப்படங்கள் தாங்கிய பதாகைகளுடன் வாகனப் பேரணியாகச் சென்றோர், முக்கிய சந்திகளில் வெடிகளைக் கொளுத்தினர். இதனால் பொதுமக்களின் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டது. (ஒ.5,7,ரி1)

## எனது...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் அந்தக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**கதவடைக்க முயற்சி**

நாட்டின் அனைவரும் சாதி, மதங்களுக்கு உட்படாமல் ஒன்றாக இருக்கக்கூடிய கட்சியாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சி இன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணமாக இருந்த பசில் ராஜபக்சவுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இந்த நாள் வராமல் இருப்பதற்கு தற்போதைய அரசு, கடந்த காலத்தில் செயற்பட்டது. ராஜபக்ச குடும்பத்தை அரசியலுக்கு வராமல் இருக்க செய்வதற்காக அரசமைப்பை மாற்றியது. எமது சுதந்திரத்துக்காக, நாட்டின் சுதந்திரத்தை நாம் விட்டு கொடுக்கவில்லை. நாட்டின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எம்மை இனவாதிகள் என்று கூறினார்கள். நாம் அவ்வாறு கிடையாது. ஆனால் இந்த அரசு எந்தவொரு மதத்துக்கும் மார்க்கத்துக்கும் மதிப்பளிக்கவில்லை.

இந்த அரசு ஜெனீவாவில் உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போதும், மண் சரிவு ஏற்படும் போதும், கொழும்பு முதல் மட்டக்களப்பு வரை குண்டு வெடிக்கும் போதும், வரி அறவிடும் போதும், கொழும்பில் குப்பை துர்நாற்றம் வீசும் போதும் அது குறித்து இந்த அரசுக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த நாட்டு மக்களுக்கு அப்போது எம்மை நினைவுக்கு வந்தது. நாட்டுக்கு எமது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த நாட்டை விடவும் மோசமான நாடொன்றையே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அச்சமின்றி விகாரைக்கு சென்று, அன்னதானம் கொடுக்கக்கூடிய நாடொன்றை உருவாக்க வேண்டும். கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்களுக்கு அச்சமின்றி அவர்களது மதத்தலங்களுக்கு செல்லக்கூடிய வகையிலான நாடொன்றை உருவாக்க வேண்டும்.

**சட்டம் ஒழுங்கு சீர்குலைவு**

முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதிகள் அல்ல என்ற எண்ணம் கொண்ட நாடொன்று தேவைப்படுகிறது. 365 நாள்களும் அவதானத்துடன் இருக்கக்கூடிய தலைவர் ஒருவர் தேவை. நாடொன்றில் ஒழுக்கம் இருக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு வேண்டும். நண்பகலில் கொள்ளை, கொலை இடம்பெறுமாயின், இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு கிடையாது. அவ்வாறு ஒழுக்கம் உள்ள ஒருவர் தேவைப்படுகின்றார்.

உலகிலேயே மிக மோசமான தீவிரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என்று 2005ஆம் ஆண்டு யாரும் நினைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு தமது குழந்தைகளை சுதந்திரமாக தொடருந்தில் அழைத்து வர முடியும் என்று தமிழ் மக்கள் நினைக்கவில்லை. முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடத்துக்குச் செல்ல முடியும் என அவர்கள் நினைக்கவில்லை. ஆசியாவிலேயே மிக சுத்தமான நகரமொன்றை உருவாக்க முடியும் எவரும் நினைக்க வில்லை. நாம் அதனை செய்தோம். எதிர்காலத்தில் அவ்வாறு செய்யக்கூடிய ஒருவர் தேவைப்படுகின்றார்.

**வடக்குக்கு ஜனநாயகம்**

30 வருட காலம் வடக்கு தமிழ் மக்களின் ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத்தை எரித்தது. இந்த நிலையில், வடக்கில் மாகாண சபை தேர்தலை 30 வருடங்களின் பின்னர் நாமே அந்த தேர்தலை நடத்தினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு பின்னரே வடக்குக்குச் சென்றது. வடக்கு மக்களின் ஜனநாயகம் பறிக்கப்பட்டுள்ளது. அந்த மக்களுக்கு ஜனநாயகத்தை மீண்டும் வழங்க வேண்டும். வடக்கு - கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இவை குறித்து சிந்திக்கக்கூடிய ஒருவரை நான் நினைத்தேன் - என்றார்.

மகிந்த ராஜபக்ச தமிழிலும் உரையாற்றினார். 'நாட்டின் நிரந்தர சுதந்திரம், சமவுரிமையை பெற்றுக் கொடுக்க நாம் முன்னின்று செயற்படுவோம். தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றாத ஒருவரே எமது வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும். சட்டத்தை பாதுகாக்கக் கூடிய ஒருவர் வேண்டும். விவசாயத்துறையை மேம்படுத்தக்கூடிய ஒருவர் வேண்டும்' என்று மகிந்த தெரிவித்தார்.

(ஒ.5,21)




# தமிழிலும் 'ஓ பேபி' விரைவில் வெளியீடு




சமந்தா நடிப்பில் தெலுங்கு மொழியில் அண்மையில் வெளியாகி, வசூலை வாரிக் குவித்த 'ஓ பேபி' திரைப்படம் அங்கு நல்ல வரவேற்பைப் பெற்றதை தொடர்ந்து தற்போது தமிழிலும் அதை மறுபதிப்பு செய்து இந்த மாதம் 15ஆம் திகதி வெளியிட உள்ளனர்.


கொரிய திரைப்படமான 'மிஸ் கிரானி'யைத் தழுவி எடுக்கப்பட்ட 'ஓ பேபி' படத்தில் நடிகை லட்சுமி பாட்டியாகவும் சமந்தா பேர்த்தியாகவும் நடித்துள்ளனர். அந்தப் படத்தைத் தமிழில் வெளியிடுவதை அடுத்து, நடிகை சமந்தாவின் ரசிகர்களின் வரவேற்பு அதிகரித்துள்ளது.

எது நடந்தாலும் நாம கவலை பட கூடாது ஏன்னா...



எது நடக்குதோ அதுக்கு தானே கால் வலிக்கும்!

- நேரம் இருக்கும் இடத்தில்தான் பொறுமை இருக்கும்.
- மனிதனின் துன்பங்கள் நிரந்தரமானவை என்று நான் நம்பவில்லை. அவன்தான் ஒரு கட்டத்தில் செத்துவிடுகிறானே.
- தனிமை போல் கொடியது எதுவும் உண்டா? எம் வேலையெல்லாம் நாமே செய்தாக வேண்டும்.
- உதிர்ந்த சருகுகளுக்காக அழுவதில்லை மரம்.
- புதிய தளிர்களை அது உருவாக் கிக் கொண்டே இருக்கிறது.
- கனத்தைக் குறைத்தால் பறத்தல் எளிது. பயணத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக் கும்தான்!
- குப்பையில் கொட்ட மனமில்லை... அதுவே தொப்பை வளர்ந்த கதை!



மொட்டுக்கு வாக்களித்துப்பார்...
உன்னைச்சுற்றி ஒரு பய வட்டம் தோன்றும்

மொட்டுக்கு வாக்களித்துப்பார்...

காண்பதெல்லாம் காவியாய் மாறும்
தூங்கும்போது திடுக்கிட்டு எழுவாய்
எல்லா வானும் வெள்ளை வானாய் தெரியும்



தேசிய கொடியில் நிறங்கள் மாறும்
வடக்கும் - கிழக்கும் சூனியம் ஆகும்
ஞானசார தேரர் நாயகன் ஆவான்
சிங்களவாதம் சினங்கொண்டு பாயும்

கிறீஸ்மேன் கிளம்பி வருவான்

#Gottabayaisback

## twitter

செங்காந்தள்@kumarfaculty
கிராமத்தின் சமூக வலைத்தளங்கள் டீக்கடையும், சலூன் கடையும் தான்...!

ச ப் பா ணி@manipmp
சிவப்பு சிக்னலில் ஒரு நிமிடம் பொறுமையாய் நிற்பது சாலை விபத்தில் இறந்தவர்களுக்கு கொடுக்கும் மௌன அஞ்சலி!

முகிலன்™@MJ_twets
யாருக்கும் மருந்தாக இருக்க வேண்டாம், முடிந்தவரை காயப்படுத்தாமல் இருப்போம்!

ச ப் பா ணி@manipmp
குழந்தைகள் வளரும்போது, பாடசாலைக் கட்டணமும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

செந்திலின்_கிறுக்கல்கள்
நினைவுகளைக் கண்முன்னே கொண்டு வருவதற்கு ஒளிப்படம் என்று பெயர்!

அடப்பாவிகளா... இது
மொபைல் கவர் டிசைனாம்...



இன்று எனக்கு தேர்வு. ஆனால் அதைப்பற்றி நான் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில், ஒரு காகிதம் மட்டுமே எனது எதிர்காலத்தைத் தீர்மானித்துவிட முடியாது'

தாமஸ் அல்வா எடிசன்



**பணியாளர் தேவை**
1) கணக்குப் பதிவாளர் - (வயது 40-50)
2) பில்கிளார்க்
3) விற்பனையாளர்
ஹாட்வெயர்ஸ் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
076 096 7766

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 1020
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.08.10 சனிக்கிழமை
M 16 21 28 68
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு திற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி கப்ருக
F 35 53 60 72
3 5 2 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.135,270,808/-
சீட்டிழுப்பு வாரம்: 479
திகதி: 2019 ஆகஸ்ட் 09
வர்ணம்: பச்சை
வெள்ளி
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 697
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 78,745,305/-
வெற்றி இலக்கங்கள்
12 33 43 71 K
விசேட வெற்றி இல.
6314

ராசி
திகதி 11.08.2019
வெற்றி வாரம் 2583
வர்ணம் ஊதா
தனுசு
வெற்றி இலக்கங்கள் 07 08 45 47
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,800,224/=
டபள் சான்ஸ்
விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 1480
ரூ.100 பரிசுக்காக 425
12.08.2019 ம் திகதி திங்கட் கிழமை 'மஞ்சள்' நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

**விற்பனைக்குண்டு**
நல்ல இன தென்னம்பிள்ளை பொதிசெய்யப்பட்டது அல்லது பொதிசெய்யப்படாதவை மற்றும் அனைத்து வகையான பயன் தருமரங்களும் அலங்கார தாவரங்களும் விற்பனைக்குண்டு.
பவிசாறு பூங்கனிச் சோலை
311/1, பலாலி வீதி, கோண்டாவில்.
077 397 6203, 021 222 8199

**விசேட வகுப்பு**
தரம் 01 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கு தங்கள் இடங்களுக்கு வந்து கற்பிக்கப்படும். 2020 தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள் விசேட வகுப்பு குழுவாகவும், தனியாகவும் கற்பிக்கப்படும்.
தொடர்பு:- 076 918 7053
பாடசாலை ஆசிரியர்

**Personal Class**
தனியா / குழுவா
தரம் 03 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
076 084 4050

யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட
WEDDING HALL



ஆவணி 28. மற்றும் புரட்டாதி 04 ஆகிய சுபமுகூர்த்த திகதிகளில் பதிவுகள் உள்ளதால் பதிவுகளை மேற்கொள்ள முடியும்

Mobile: 076 326 3188
Email: asrhalljaffna@gmail.com
Facebook: ASRHotel Jaffna



WEDDING HALL
542, K.K.S Road . Jaffna
T.P: 021 222 1355, 021 373 4116
RVG குழுமம்

இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg ) மொத்தமாகவும் (ரூபா 100), சில்லறையாகவும் (ரூபா 110) பெற்றுக்கொள்ளலாம்.

சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
021 222 2567
(IN/10801)
(11.17)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னராசா சிவபூரணம்



மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சிவபூரணம் நேற்று(11.08.2019) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவசி, சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும் வசந்தா (உள்ளூராட்சி, உதவியாளர் பச்சிலைப் பள்ளிபிரதேசசபை, பளை) இன் பாசமிகு தாயாரும் மகாலிங்கத்தின் மாமியாரும் அமரதீபன் (கிராம உத்தியோகத்தர் சங்கத்தானை, நாவற்காடு பிரதேச செயலகம், தென்மராட்சி), புவனதீபன் (முகாமைத்துவ உதவியாளர் உள்ளூராட்சி திணைக்களம், வடமாகாணம்), அஜாவினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி), சிந்துஜா(குடும்ப நல உத்தியோகத்தர், மாங்குளம்), கனீஸ்டா (ஆசிரியர், வ/அருவித்தோட்டம், சிவானந்தா வித்தியாலயம்), ரனீஸ் (கிராம உத்தரியோகத்தர் நாவற்குழி மேற்கு பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் யரிஸ், தேனபி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை கரலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

தகவல்
குடும்பத்தினர்.

## சிட்டுக் குருவி



சின்னச் சின்ன சிட்டுக் குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி!


கொட்டிக் கிடக்கும் தானியக் குவியலை
கூடி வந்து கூடி நின்று
தொட்டு தொட்டு கொத்தித் தின்று
கூடி பறந்து கூடு செல்லும்!

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக்குருவி
நன்றாய் செப்பும் பாடம் செவியுறுவீர்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

## தகவல் அறிவோம்

- வண்டுகள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவை. பூச்சி இனங்களில் 40சதவிகிதம் வண்டுகள்தான். உலகில் 350 000 வகை வண்டு இனங்கள் உள்ளன. இன்னும் கண்டறியப் படாத வண்டு இனங்கள் ஏராளமாக இருக்கின்றன.
- 6கால்களும் 4 இறக்கைகளும் வண்டுகளுக்கு உண்டு. முன் இறக்கைகள் கெட்டியானவை. பின் இறக்கைகள் மென்மையானவை. பின் இறக்கைகள் மூலமே வண்டு பாதுகாக்கிறது. பறக்காமல் இருக்கும் போது மெல்லிய பின் இறக்கைகளை மூடிப் பாதுகாக்கின்றன. முன் இறக்கைகள் தலையின் முன்பக்கத்தில் 2உணர்கொம்புகள் இருக்கின்றன.
- வண்டுகள் பனி மிகுந்த வடதென் துருவங்கள் கடல்களைத் தவிர மற்ற இடங்களில் வாழ்கின்றன. இவை நீரிலும் நிலத்திலும் வாழ்பவை.
- பெரும்பாலான வண்டுகள் மரம் செடி காய்கனிகளான் போன்றவற்றின் பகுதிகளை உணவாக உண்கின்றன. சில பெரிய வண்டுகள் சிறியபறவைகளையும் விலங்குகளையும் சாப்பிடுகின்றன.
- இவை சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன. தாவரம் விலங்குகளின் கழிவுகளைச் சாப்பிடுவதன் மூலம் சூழலுக்கு நன்மை விளைவிக்கின்றன.
- சாண வண்டுகள் விலங்குகளின் கழிவுகளைச் சாப்பிடுகின்றன. இதானல் கழிவு வேகமாக மறு சூழற்சி ஆகிறது. லேடிபேர்ட் என்ற வண்டு தாவரங்கள் காய்கறிகளை உண்ணும் பூச்சிகளை உணவாக்கிக்கொள்வதால்மனிதர்களுக்கு நன்மை விளைவிக்கின்றன.
- ஒரு மில்லிமீற்றர் நீளம் கொண்ட மிகச்சிறிய வண்டுகளும் உள்ளன. தென் அமெரிக்காவில் உள்ள டைடனஸ்வண்டு20செ. மீற்றர் நீளம் இருக்கும்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகம் சிவஞானம்

பிறப்பு
10.02.1940

இறப்பு
15.08.2016


திதி: 12.08.2019

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா....
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வட கிழக்கு,
மானிப்பாய்.
(cs.27320-13)

என்றும் உங்கள் நினைவில்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு
10
.
09
.
1953

இறப்பு
10
.
08
.
2019

### கனகசபை குணராசா

(ஓய்வுநிலை C.T.B உத்தியோகத்தர், கோண்டாவில்)

மணல் வீதி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை குணராசா, கடந்த (10.08.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை பூபதியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணைமுத்து செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகனும் உருத்திர பூபதியின் அன்புக்கணவரும் ஜெசாமினி (அவுஸ்திரேலியா) ஜெம்சினி (சாவகச்சேரி UC), ஜறோசாந்தன், ஜெய்மதுரன் (Student of Agro Technology University, Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும்செல்வரட்ணம், குலசிங்கம், தவமணி, மலர், சிவப்பிரகாசம், யோகேந்திரன் (லண்டன்), இராசேந்திரன், புஸ்பராணி, சுகிர்தராணி, ஆகியோரின்அன்புச்சகோதரனும்மகேந்திரன்,இராஜேந்திரன்,கணேசானந்தம், பாலச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆதவன் (அவுஸ்திரேலியா), விமலேந்திரன் (சான்றுபெற்ற பாடசாலை, அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜீஸ், ஜீவித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


உசன் கந்தசுவாமி கோவிலடி,
மிருசுவில்,

தகவல்: குடும்பத்தினர்.
077 034 4949

## மரண அறிவித்தல்

### பரமநாதப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



தோற்றம்
09.10.1934

மறைவு
11.08.2019

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதபிள்ளை கந்தசாமி நேற்று (11.08.2019) காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமநாதபிள்ளை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சேதுராசா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் துரைச்சாமி, இராசமணி காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா, இராமசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி மகேஸ்வரி, தர்மலிங்கம் நேசம்மா, சேதுராசா கிருஸ்ணானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ரவீந்திரமூர்த்தி, சுசிலாதேவி (கனடா) இராஜேஸ்வரன் ஆகியோாரின் பாசமிகு தந்தையும் சியாமளா, சரவணபவா, தயாரதி ஆகியோரின் அன்புமாமனாரும் வாருணி, மயூரன், அனுசியா, ஜனார்த்தினி, சர்மிலன், அபிசனன், அபிசாளினி ஆகியோரின் அன்புப் பேரனும்ாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் போதி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

உ
ஐயனார்துணை



அனலையம்பதி - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு

பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திர (ஐயனார்) தேவஸ்தான

வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2019

கொடியேற்றம்
06.08.2019
செவ்வாய்க்கிழமை

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க்காதியே யோலம் செண்டார்
கையனே யோலம் எங்கள் கடவுளே யோலம் மெய்யர்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே யோலம் மோலம்

தேர்த்திருவிழா
14.08.2019
புதன்கிழமை

விழாக்கால நிகழ்வுகள்

12.08.2019 திங்கள் 7ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வேட்டைத் திருவிழா
13.08.2019 செவ்வாய் 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் - மாலை - சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பறத் திருவிழா)
14.08.2019 புதன் 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை.
15.08.2019 வியாழன் 10ஆம் திருவிழா தீர்த்தத் திருவிழா காலை 10.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோணகம் (கொடியிறக்கம்) சண்டேஸ்வர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.
16.08.2019 வெள்ளி 11ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம், மாலை திருக்கல்யாண உற்சவம்.
17.08.2019 சனி பகல் பிராயச்சித்த அபிஷேகம், மாலை வைரவர் பொங்கல்.

11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

அனலைதீவு - 05 (CS/26920)(11)
"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

உ

வேலணை - பெருங்குளம்

முத்துமாரி அம்மன் திருக்கோயில்

வருடாந்த மஹோற்சவம்

விகாரி வருடம் - 2019



"வேலணை யூராள் விளங்கு பெருங்குளத்தின் பால்
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து"

தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா

- **14.08.2019 -** புதன்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு திருத்தேரில் பவனிவருதற்கு அம்மன் எழுந்தருளல்
- **15.08.2019 -** வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்

**அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு தேரில் பவனிவரும் எம் குலதெய்வமாகிய முத்துமாரி அம்மனைத் தரிசிப்பதுடன் மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.**

குறிப்பு:- மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன் கருதி 776 - குறிகாட்டுவான், 780 - ஊர்காவற்றுறை வழித்தடத்தில் ஈடுபடும் பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகள் தங்களது பொதுநலத்துடன் கூடிய சேவையை அம்மன் ஆலயம் வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வேலணை.** தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.

(cs. 272278) (13)

YAMAHA
Revs your Heart

57,000/= வரை

விலைக் கழிவுக் கொண்டாட்டம்

அரச உத்தியோகத்தர்களுக்கு
முற்கொடுப்பனவில் விஷேட சலுகை

ரூபா. 36,000 ஐச் செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்




பழைய மோட்டார்
சைக்கிள்களை கொடுத்து புதிய மோட்டார்
சைக்கிள் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

Digital Electronics
62/16, Stanley Road, Jaffna.
YAMAHA DIGITAL - JAFFNA
0776 623 824

## 04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சர்வாஜினி சுரேஷ்

(முன்னாள் ஆசிரியை,
யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை.
யா/ நடராசா மகாவித்தியாலயம் - வேலணை)




மலர்வு 16.07.1971
உதிர்வு 12.08.2015
திதி : துவாதசி (12.08.2019)

கண்ணிமைத்து விழிக்கவில்லை
நான்கு ஆண்டுகள்
சென்று விட்டதம்மா !
ஒரு நொடிப் பொழுதும்
அழியவில்லை - எம் நெஞ்சங்களில்
உங்கள் அன்பான உள்ளம்
எம்மை விட்டு

என்றும் நீங்கா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
சிலும்பிலாட்டி,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(CS 27318)
(14,17)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை மகேசன்



மண்ணில் 02.08.1930
விண்ணில் 10.08.2019

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி, திருகோணமலை, உரும்பிராய், கனடா, ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மகேசன் கடந்த (10.08.2019) சனிக்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை, சந்தனம் தம்பிப்பிள்ளை தம்பதிகளின் அருமைப்புதல்வரும் காலஞ்சென்ற ஆறுமுகம் வைத்திலிங்கம், பவளம்மா வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயதேவியின் அன்புக்கணவரும் ஞானாம்பிகை, சர்வேஸ்வரி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் , ஜானகி (M.Sc Veterinary Surgeon, USA), பகீரதன் B.Sc (முன்னாள் ஆசிரியர், Colombo Good Shepherd Convent, Director Beefort Intl.school, ACA colombo), குமுதினி (முன்னாள் ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கனடா), மாதவன் ( Bsc.Eng.(Director, Colombo Petro Engineering Ltd, Colom bo), மைதிலி (முன்னாள் Stenographer, Jaffna Kacheri, கனடா) ஆகியோரின் அன்புமிகு தந்தையும் Dr.சத்தியசீலன் Ph.D (Veterinary surgeon, USA), ஸ்ரீரங்கநாதன் (Canada Global care, கனடா), ஜெயநேசன் (Canada Fed Ex &KEG.கனடா), ரவிகலா, விஜிதா B.A ஆகியோரின் அன்புமாமனாரும் Dr.சிந்துஜா Ph.D (University of Toranto), வருண், திவ்யா (Staff, Topline Cred it Union, Minnesota, USA ) ராகுல், கிருஷா, ஜஸ்வரன் (B.Eng), அதிஷ்வரன் B.Eng. ரோஹித், சஞ்சய், ராகவ், ரிஷானா, Dr.Geoff Bouvier Ph.D (University of Toranto), Mr.Ramanan (Manager, TCF Bank , Minnesota, USA) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.08.2019) திங்கட்கிழமை பி.ப 2.00 - 4.00 மணியள வில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1. Canada வில் நடைபெற்று பூதவுடல் Highland Hills Funeral Home and Cemetery 12422 Woodbine Ave Gormley ONLOH1 GO, Canada வில் 4.30 pm 5.00pm இடையில் தகனஞ்செய்யப்படும். . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

18/05, Mahathma Gandhi Road, Jaffna
தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அம்பலம் சண்முகசுந்தரம்

(கொட்டில் சின்னத்தம்பி, முந்திரிகைத் தோட்ட சின்னத்தம்பி )



அளவெட்டி செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும், செம்பாடு மாரிசிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும், அளவெட்டி மத்தியில் தற்போது வசித்தவருமாகிய அம்பலம் சண்முகசுந்தரம் (கொட்டில் சின்னத்தம்பி, முந்திரிகைத் தோட்ட சின்னத்தம்பி) நேற்று (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமானந்தசோதியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் (லண்டன்), ஆனந்தராஜ் (கனடா), சோதிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி (லண்டன்), கலைவாணி (கனடா), கௌசல்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, விசாகம்மா மற்றும் சிவானந்தன் (திருநெல்வேலி), விசுவலிங்கம் (அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மதிவதனசோதி (யாழ்ப்பாணம்), சோதிநாதன் (பிரான்ஸ்), இன்பசோதி (வவுனியா), சோதிமுருகன் (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லவன் (லண்டன்), வர்ஷா (லண்டன்), சத்தியா (கனடா), சாதனா (கனடா), சரண்(கனடா), லிக்ஷா (லண்டன்), லிதுஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி வடக்கு கேணிப்புட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூட்டுறவுச் சங்க வீதி,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(CS/27322)(11)
தகவல்:-
குடும்பத்தினர்.

மனைவி (இலங்கை) - 0094 212059788, மகன் -விக்கினேஸ்வரன் (லண்டன்) - 0044 790 868 7796, மகன்- ஆனந்தராஜ் (கனடா) - 001 647 300 9726, மகன் - சோதிராஜ் (லண்டன்) -0044 7932 793363, பெறாமகன் - சிவரஞ்சன் (இலங்கை)- 0094 7685 43400

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 01 . 1938



இறப்பு 10 . 08 . 2019

### சிவப்பிரகாசம் சின்னாச்சிப்பிள்ளை
(ஞானகி)

பொன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சின்னாச்சிப்பிள்ளை (ஞானகி) 10.08.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் பழனி - செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் ஜெயந்திரகுமார், ஜெயராணி, பாலகுமார், பத்மராணி, இன்பராணி, காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் விக்னகுமார், செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் தெற்கு,சுழிபுரம்.
077 937 0253
(32658)(14)
தகவல்
குடும்பத்தினர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# யாரை ஆதரிக்கக்கூடாது என்பதுதான் தமிழர்கள் முன்னுள்ள தெரிவு

இலங்கைப் பொதுமக்கள் முன்னணி சார்பில் அடுத்த தேர்தலில் களமிறங்கப்போகும் அரச தலைவர் வேட்பாளர் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தம்பியுமான கோத்தபாய ராஜபக்சதான் என்பது நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாயிற்று. மகிந்த குடும்பத்தில் இருந்து அதிகார நாற்காலிக்காக வந்திருக்கக்கூடிய மற்றொருநபராக மீண்டும் குடும்ப ஆதிக்கத்தின்வெளிப்பாடாகவந்திறங்கியிருக்கிறார் கோத்தபாய.

மகிந்த அணியிலிருந்து அடுத்த வேட்பாளராக அவர் களமிறங்குவார் என்கிற எதிர்பார்ப்பும் எதிர்வுகூறல்களும் நீண்ட நாள்களாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், தமிழர்களுடனான போரில் நீண்ட போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளவரும் பன்னாட்டுச் சமூகத்துடன் முரட்டுத்தனமான உறவைப் பேணுபவரும் சீனாவுடனான மகிந்தவின் அதிகரித்த இணக்கத்துக்கு முதுகெலும்பாக இருந்தவருமான அவரை மேற்கு நாடுகள் ஏற்றுக்கொள்ளுமா என்கிறதயக்கம் காரணமாகஒருவேளைஅவர்வேட்பாளராக அறிவிக்கப்படாமல் இருக்கக்கூடும் என்கிற சிறு நம்பிக்கையும் கூடவே இருந்து வந்தது. ஆனால் அந்த நம்பிக்கை இப்போது பொய்த்துப்போய்விட்டது.

வேட்பாளராகக் கோத்தபாய அறிவிக்கப்பட்டதன் மூலம், மகிந்த குடும்பம் மீண்டும் ஒரு அதிகார வேட்டைக்கு முழு மூச்சுடன்களமறிங்கிவிட்டது. இந்தப்பயணத்தில்தலைமை அமைச்சர் நாற்காலியில் மகிந்தவும் கண் வைத்திருக்கிறார். ஒருவேளை இருவருமே எதிர்வரும் அரசதலைவர் தேர்தலிலும்நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெற்றுவிட்டால், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாதொழித்துவிட்டு மீண்டும் நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறைமையைக் கொண்டு வருவதற்கு மகிந்த முயலக்கூடும். அத்தகைய தருணத்தில் அந்தப் பதவியை மகிந்தவுக்கு விட்டுக்கொடுக்கக்கூடியவரான, நம்பிக்கையான ஒருவரே அந்தப் பதவியில் இருக்கவேண்டும். அதற்குத்தனது தம்பியைவிட நம்பிக்கையான ஒருவரை மகிந்த கண்டுபிடித்துவிட முடியாது என்பது யதார்த்தம்தான்.

அதற்கும் மேலாக, தமிழர்கள் மீதான போரை வென்று கொடுத்த சூத்திரதாரி என்கிற விம்பமும் கோத்தபாய மீது விழுவதால் அவர் ஒரு வெற்றிக் குதிரை என்று மகிந்த நம்பியதில் வியப்பில்லை. எனவே பரப்புரைகளிலும் தேர்தல் மேடைகளிலும் போரும் படையினரும் போர்வெற்றிகளும் இனி விரவிக் கிடக்கும் என்பதில் ஐயமில்லை. அதனைப் பெரு முதலீடாகக் கொண்டே மகிந்த அணியினர் தேர்தலை எதிர்கொள்வார்கள்.

அதற்கெதிராகப் பலம்மிக்க ஒரு வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளாரா என்கிற கேள்வியும் இருக்கின்றது. 2015 போன்று கடைசி நேரத்தில் ஒரு புதிய முகம் எல்லோரையும் ஆச்சரியப்படுத்தக்கூடிய வகையில் அந்தக் கட்சியின் தேர்தல் களத்துக்கு வரும் சாத்தியங்கள் பெருமளவில் இல்லை.

அனேகமாக சஜித் பிரேமதாஸ வேட்பாளராகலாம். அவருக்குக் கணிசமான ஆதரவு சிங்கள மக்களிடம் இருக்கின்ற போதும், கோத்தபாயவையும் சிங்கள உணர்வலைகளை கிளர்ந்தெழ வைக்கப்போகும் போர் முழக்கங்களையும் தாண்டி வெற்றியைப் பெறமுடியுமா என்பது இப்போது வரையில் கேள்விக்குரியதுதான்.

இந்தநிலையில்துரதிர்ஷ்டவசமாகத்தமிழர்கள்முன்னுள்ள தெரிவு யாரை ஆதரிப்பது என்பதாக இல்லாமல் யாரை ஆதரிக்கக்கூடாது என்பதாகவே அமைந்து வருகிறது. 1994ஆம் ஆண்டு அரசதலைவராக சந்திரிக குமாரணதுங்கவை விருப்பப்பட்டுத் தேர்வு செய்ததற்குப் பின்னரும் முன்னரும் யாரை அரசதலைவராக்கக்கூடாது என்பதற்காகவே வாக்களிக்கும் நிலையில்தான் தமிழர்கள் இருக்கிறார்கள். இப்போதும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.



அளவுக்கதிகமான காடழிப்பு

# பிரேஸில் மீது ஐ.நாவின் நடவடிக்கைகள் பாயுமா?

பிரேசில் நாட்டிலுள்ள அமேசன் காடு அதற்கு மட்டும் சொந்தமாக இருக்கலாம். ஆனால், அது இருப்பதால் பெய்யும் மழை உலக நாடுகளுக்குக் கொடையாகவும் உரிமையுள்ளதாகவும் திகழ்கிறது. கனிம வளத்துக்காகவும் தொழிற்றுறை வளர்ச்சிக்காகவும் அந்த அமேசன் காட்டின் பெரும் பகுதியை வேறு பயன்பாட்டுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார் பிரேசில் அதிபர் ஜைர் பல்சானரோ. புவி வெப்பமாவதால் ஏற்படும் தீமைகளையும் மாற்றங்களையும் உணர்ந்துள்ள உலகம், அதற்கு மேலும் காரணமாக இருக்கப்போகும் அமேசன் காடு அழிப்பை வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

**ஐ.நா. தலையிட வேண்டும்**

தங்கள் நாட்டு எல்லையிலுள்ள மழைக்காடுகளை அழிப்பது பிரேசிலைப் பொறுத்தவரையில் சட்டபூர்வமாக சரியானதாக இருக்கலாம். இது பிரேசிலின் இறையாண்மை பற்றிய விடயம் மட்டுமல்ல. மழைப் பொழிவு, புவி வெப்பநிலை உயர்வு ஆகியவற்றுடனும் சம்பந்தப்பட்டிருப்பதால் உலக நாடுகள் நேரடியாகவே தலையிடத் தகுந்த காரணம் இருக்கிறது. உலக அளவில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் கடமை ஐக்கிய நாடுகள் சபைக்கும் சமூகத்துக்கும் இருக்கிறது.

வருமானம், வளர்ச்சி, வேலைவாய்ப்புக்காக இயற்கையை அழிக்கும் பிரேசில் அதிபருடன் பேசி, அவருக்குக் கிடைக்கும் வருவாயைவிட அது ஏற்படுத்தப்போகும் அழிவின் மதிப்பு அதிகம் என்பதை உணர்த்த வேண்டும்.

புவி வெப்பத்தைக் குறைக்க 2015ஆம் ஆண்டில் நடந்த பரீஸ் ஒப்பந்தத்தில் 195 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. அதில் காடுகளை அழிக்கக் கூடாது என்பது முக்கிய அம்சம். அப்படியும் பிரேசில் அழிப்பதைத் தடுக்கும் வழிமுறை ஏதும் உலக நாடுகளால் கண்டுபிடிக்கப்படவில்லை.

பேச்சு மூலமே இதைத் தீர்க்கமுடியாவிட்டால்ஐ.நா சபை பாதுகாப்புச் சபை, ஐ.நா சட்டத்தின் கூறு 42 இன் படி பிரேசில் மீது நடவடிக்கை எடுக்கலாம். இராணுவப் படைகளைக் கொண்டும் நடவடிக்கை எடுக்க இந்தப் பிரிவு அதிகாரம் அளிக்கிறது. போர் நடக்கும் பகுதியில் குடிமக்களைப் பாதுகாக்க சில பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக ஐ.நா. இதன்படி அறிவித்தது.



பிரேசிலின் அமேசன் காட்டைச் சுற்றிலும்கூட இப்படி பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து அங்கு காடழிப்பு இயந்திரங்களும் ஆள்களும் செல்ல விடாமல் தடுக்கலாம். ஆனால், இதைத் தங்கள் இறையாண்மையில் தலையிடும் செயலாகக் கருதி பிரேசில் தனது இராணுவத்தை எதிர் தாக்குதலுக்குப் பயன்படுத்தினால் ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்படும். அத்துடன் மிகப் பெரிய சேனைகளை அங்கு கொண்டு சென்றால் அதன் மூலமும் காடுகளுக்குச் சேதம் ஏற்படும்.

**பிரேசில் மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. சபைக்கு அதிகாரம் உண்டு**

ஐ.நா சாசனத்தின் 41ஆவது கூறின்படி பிரேசில் மீது பொருளாதாரத் தடை உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம். இது வழிக்குவராத நாட்டையும் தலைவர்களையும் பொது நன்மைக்காகச் செயற்படுமாறு வலியுறுத்த ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இந்தத் தடை நடவடிக்கைகள் முழு வெற்றியைத் தரும் என்பதும் நிச்சயமில்லை. ஏனென்றால், இத்தகைய நடவடிக்கைகளால் சாமானியர்கள் அவதிப்படுவார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு, வருமானம் போய்விடும். மருந்துமாத்திரைகள் கிடைக்காது. இருந்தாலும், இப்படிப்பட்ட நடவடிக்கை மூலம்தான் பிரேசில் ஆட்சியாளர்களைத் தங்கள் செயலால் ஏற்படவிருக்கும் தீமைகளின் விளைவுகளை உணரச்செய்ய முடியும். ஐ.நா. என்ன செய்யப் போகிறது?

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM
திங்கட்கிழமை 12 ஒகஸ்ட் 2019


## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 12
பொல்கஹவெல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஊழியர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.
அவரிடமிருந்த பணம் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பணத்தைக் கொள்ளையிடுவதற்காக நேற்று அதிகாலை 12.15 மணிக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு உந்துருளியில் வந்த இருவரால், இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவத்தில் பலத்த காயமடைந்த ஊழியர் பொல்கஹவெல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ஓ.5)

## கீச்சகத்தில் முதலிடம் பிடித்தார் கோத்தபாய

யாழ்ப்பாணம், ஓக. 12
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கீச்சகத்தில் அவரது பெயர் 'ட்ரெண்ட்' ஆகியுள்ளது.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.
இந்த மாநாட்டில், அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.
இதனை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.
இந்நிலையில் கீச்சகத்தில் இலங்கை ட்ரெண்டிங்கில் முதலிடம் பிடித்துள்ளார். (ஓ.5)

## தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணம் வண். வடமேற்கு பிரப்பம்பதி சிறிசெல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி சிறிஞானவைரவர் ஆலய புதிய சித்திரைத் தேர் வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
இதன்போது விநாயகப்பெருமானுக்கான சித்திரத் தேரும், வைரவப்பெருமானுக்காக வடிவமைக்கப்பட்ட புதிய தேரும் வெள்ளோட்ட நிகழ்வு இன்று பி.ப 3 மணி முதல் 4 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.
ஆலயத்தின் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற நிலையிலையே இன்றையதினம் புதிய தேர் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் தேர் மற்றும் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

கேலிச்சித்திரம்



நன்றி - சண்டே ஒப்சேவர்

# ஆள்களைக் கடத்தி கப்பம் கோரிய குழு மடக்கப்பட்டது

### பிரான்ஸ் குடிமகன் உள்ளிட்ட 4பேர் கைது என்கிறனர் முல்லை. பொலிஸார்

முல்லைத்தீவு, ஓக. 12
வவுனியாவைச் சேர்ந்த குடும்பத் தலைவரை முல்லைத்தீவில் வைத்துக் கடத்திப் பணம் பெறும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிரான்ஸைச் சேர்ந்தவர் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்துள்ளதாக முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

ச.நாகேந்திரன் (வயது-42) என்பவரே கடத்தப்பட்டிருந்தார். அவரின் மனைவி மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய, தேடுதல் நடத்திய பொலிஸார் அவரை மீட்டதுடன், கடத்தியவர்கள் என்று கூறப்படும் 4 பேரைக் கைது செய்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் தங்கம் புதைத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் அதனைத் தோண்டி எடுக்க வருமாறும், வவுனியாவைச் சேர்ந்த குடும்பத் தலைவரை கடந்த முதலாம் திகதி சிறிய ரக வாகனத்தில் சந்தேக நபர்கள் 4 பேரும் அழைத்து வந்துள்ளனர். அவரை முள்ளிவாய்க்காலில் வீடு ஒன்றில் அடைத்து வைத்துள்ளனர். பின்னர் சாவகச்சேரியில் உள்ள வீட்டுக்கு கொண்டு வந்து அடைத்து வைத்துள்ளனர். கடத்திக் கொண்டு வரப்பட்டவரின் மனைவிக்கு அலைபேசி ஊடாக அழைப்பு எடுத்து பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கடத்தப்பட்டவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இதனையடுத்து பிரான்சில் வசித்து வரும், சாவகச்சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சிவரஞ்சிதன் என்பவர் தலைமையிலான குழுவினரை சந்தேகத்தில் கைது செய்துள்ளோம். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். என்று குறிப்பிட்டனர்.
இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 3 பேரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5,ரி3)

# தமிழகத்திலுள்ள ஈழ ஏதிலிகளையும் வாக்காளர் பட்டியலில் உள்ளடக்குங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோருகின்றார் சார்ள்ஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 12
போர் காரணமாக வடகிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து தமிழகத்தில் தங்கியுள்ள ஈழஏதிலிகளின் பெயர் விவரங்களை வாக்காளர் பட்டியலில் இணைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:
இலங்கையிலே போர் உச்சம் பெற்ற 1983, ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையில் தாயகத்தில் இருந்து சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தாய்த் தமிழகத்துக்கு படகுகள் மூலம் ஏதிலிகளாக தமது உயிரைப் பாதுகாப்பதற்காக தப்பியோடி இன்று தமிழகத்தின் பல ஏதிலி முகாம்களிலும் உறவுகள் மற்றும் வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளனர். அவர்களில் பலர் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் கொண்டுள்ள பொழுதும் பல இடையூறுகளை எதிர் கொள்கின்றனர்.
இடம்பெயர்ந்து சென்றவர்களின் பிள்ளைகள் கூட இன்று திருமணம் ஆகி தனிக் குடும்பமாக உள்ள நிலையில் அவர்களுக்கான இலங்கைக்கான பதிவுகள், பதிவுச் சான்றிதழ்கள் அடையாள அட்டைகள், நாட்டில் காணி நிலம் அவர்களுக்கான வீட்டு வசதிகள் எதுவுமற்ற நிலையில் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர். இதன் காரணமாக சிலர் இந்தியாவிலேயே தமக்கான வதிவிடத்தை அனுமதியைப் பெற முடியுமா என்று கூட சிந்திக்கும் அளவுக்கு கொண்டு சென்றுள்ளது.
தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் ஒரு லட்சம் மக்களை எமது தாயகத்தை அழைத்து வந்து அவர்களுக்கான இருப்பிட வசதி வேலை வாய்ப்பு உட்கட்டுமான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசுக்கும் அதனை மேற்கொள்வதற்கான பொறுப்பு எமக்கும் உள்ளது. இதேநேரம் இவ்வாறு தங்கியுள்ள சுமார் ஒரு லட்சம் மக்களில் மிக அதிகமானவர்கள் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு தங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.
இவ்வாறான மக்களை இங்கு அழைத்து வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும் அதேநேரம் அவர்களின் பெயர் விவரங்களை வன்னி மாவட்டத்தின் அவர்களின் சொந்த ஊரிலேயே வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவுகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் முன்கூட்டியே தமது பதிவுகளை இங்கே மேற்கொள்வது அவர்களின் பல நடவடிக்கைகளுக்கும் எதிர்காலத்திலும் உதவும். பிள்ளைகளை பாடசாலைகளில் இணைத்தல், கல்வி வசதி, வேலைவாய்ப்புக்கும் அவை தொடர்ந்தும் உதவும். இதனை தமிழகத்தில் உள்ள உறவுகளுக்கு உணர்த்தி அவர்களின் இங்குள்ள உறவினர்களும் பதிவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஓ.5,105)

# யாழ். - கொழும்பு பயணிகள் பேருந்துகளில் 60 வீதமானவை சட்டக் குறைபாடுடையவை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் திடீர்ச் சோதனையில் 50 பேருந்துகள் சிக்கின

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான பயணிகள் பேருந்துகளில் 60 சதவீதமான பேருந்துகள் சட்டத்தேவைகளை முழுமை செய்யாதவையாகவும் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறிய பேருந்துகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்டமையும் இணங்காணப்பட்டுள்ளன. அவற்றின் நடத்துநர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் குற்றப்பத்திரம் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



ஏ-9 வீதியில் அதிகளவில் இடம்பெறும் விபத்துக்களைத் தடுக்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் நேற்றுமுன்தினம் இந்தத் திடீர் சோதனையில் இறங்கினர்.
மக்களின் நலன்கருதி நேற்று முன்தினமிரவு மற்றும் நேற்று அதிகாலை வேளைகளில் சுமார் 50 பேருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போது காலாவதியான சாரதி உரிமப் பத்திரம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரங்கள் இல்லாத வாகனங்கள் உள்ளிட்ட வாகன நடத்துநர்கள் மற்றும் நடத்துநருக்கான அடையாள அட்டைகள் இல்லாத வாகனங்கள் அடையாளம் காணப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டது.
வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையுடன் இணைந்து வடக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பயணிகள் தங்கள் பிரயாணத்தின் போது தாம் பயணிக்கும் பேருந்துகள் அனுமதிப் பத்திரங்கள்கொண்டுள்ளனவா என்பது தொடர்பில்விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டுள்ளார்.
இந்தச் சோதனை நடவடிக்கையில் ஆளுநர் செயலணியும் இணைந்துகொண்டது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)



### மருத்துவர் சிவப்பிரியன் ஞாபகார்த்தமாக
# வெற்றிலைக்கேணி வித்தியில் புதியகிணறு அமைத்துத் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
வடமராட்சி வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மருத்துவர் சிவப்பிரியன் ஞாபகார்த்த குடிதண்ணீர்க் கிணறு பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் மருத்துவர் நாகேஸ்வரனால் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டது.
பாடசாலையில் முதல்வர் த.செல்லக்குமார் தலைமையில் கடந்தவாரம் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் மருத்துவர் மனோகரன் கலந்துகொண்டு கிணற்றை பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக அதிபரிடம் கையளித்தார்.
நிகழ்வில் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், பிரதேச செயலக கணக்காளர், அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (த-70)

### மாகாணத் திணைக்களங்களுக்கு
# நியமிக்கப்பட்ட 25 பணியாளர்கள் ஆளுநர் செயலகத்துக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 12
வடக்கு மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்களுக்கும் நியமனம் செய்யப்பட்ட 25 அபிவிருத்தி அலுவலர்கள், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு திணைக்களத்திலும் நிலவிய அபிவிருத்தி அலுவலர் வெற்றிடங்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டன. பட்டதாரிகள் அந்த இடத்துக்கு நியமனம் செய்யப்பட்டனர். கடந்த ஜூலை மாதம் 16ஆம் திகதி மன்னாரில் வைத்து இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.
மாகாணத்தின் ஒவ்வொரு திணைக்களங்களிலும்? அவர்கள் அபிவிருத்தி அலுவலர்களாகப் பொறுப்பேற்றிருந்தனர். இந்த நிலையில் திடீரென, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு 25 அபிவிருத்தி அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.
மேற்படி அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்ட திணைக்களங்கள் தொடர்பான ஆளுநர் செயலகத்தின் பணியை மேற்கொள்வதற்கே இடமாற்றப்பட்டதாக, ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ.5,105)

# யாழ்.போதனா மருத்துவமனைக்கு 'சி.ரி.ஸ்கானருக்கே' நிதி சேகரிப்பு

## அதன் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு சி.ரி. 'ஸ்கானர்' இந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 112.5 மில்லியன் ரூபா தேவையென்று கூறப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 110 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது. இன்னும் 2.5 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இதற்கு நிதி சேகரிக்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பில் சி.ரி. 'ஸ்கானருக்கு' நிதி சேகரிக்கப்படுகின்ற விடயம் பற்றி சமூகவலைத் தளங்களில், ஊடகங்களில் மாறுபட்ட கருத்துக்கள் பரப்பப்படுகின்றன என்றும் தெரிவித்த பணிப்பாளர், அதுபற்றிவிளக்கமளித்து அனுப்பியுள்ள செய்திக்குறிப்பிலேயேமேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணப்போதனா மருத்துவமனையைப் பொறுத்தவரை 2 சி.ரி. 'ஸ்கானர்கள்' இருப்பது மிக அவசியம். ஓர் இயந்திரத்தை அரச நிதி ஊடாகப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இது தாமதமாகவே கிடைக்கும். ஆகவே நன்கொடையாளர்களின் உதவியில் சி.ரி. 'ஸ்கானர்' ஒன்றை விரைவாகப் பொருத்தும் முயற்சியில் மருத்துவமனை நிர்வாகம் ஈடுபட்டு வருகின்றது.
ஆறு மாதங்களுக்கு முன்னர் பிரிட்டனைச் சேர்ந்த பி. ரஞ்சன் தற்போது 46 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளார். சுவிற்சர்லாந்தில் வசிக்கும் எஸ்.கதிர்காமநாதன் ரூபா 20 மில்லியன் வழங்கியிருக்கிறார்.
மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் ஒப்புதலோடு தரமான (160 ஸ்லைஸ்) சி.ரி. ஸ்கானரை ஜப்பானில் இருந்து தருவிப்பதற்காக ரூபா 50 மில்லியன் நிதி 3 மாதங்களுக்கு முன்னர் முற்பணமாக வழங்கப்பட்டது. வரும் செப்ரெம்பர் மாதமளவில் நவீன சி.ரி. 'ஸ்கானர்' இயந்திரம் வந்தடையும்.
எம்.ஆர்.ஐ. 'ஸ்கான்' இயந்திரம் முற்றுமுழுதாக அரசின் நிதியில் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இந்த வருட இறுதிக்குள் இது வந்துவிடும். என்று பணிப்பாளரின் செய்திக் குறிப்பில் உள்ளது. (த,105)



### சபையின் நடமாடும் சேவை உதயநகரில் நடைபெற்றது

கிளிநொச்சி, ஓக. 12
கரைச்சிப் பிரதேச சபையின் 'ஊரகம் நோக்கிய உள்ளூராட்சி சேவைகள்' நடமாடும் சேவை உதயநகர் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இது நடைபெற்றது. உள்ளூராட்சி சபைகளால் பொது மக்களுக்குச் செய்யப்படும் பணிகளான கழிவகற்றல் சேவைகள், வீதி விளக்கு பொருத்துதல், வீதிகள் மயானங்கள் சீரமைப்பு, சித்த ஆயுள்வேத வைத்திய சேவைகள், வியாபார நிலையங்களுக்கு உரிமம் வழங்கல், நாய்களுக்கு தடுப்பூசி கருத்தடை உரிமம் வழங்கல், கட்டட அனுமதி வழங்கல், ஈருருளி உரிமம் வழங்கல், ஆதன அறவீடுகள், பொது மக்கள் முறைப்பாடுகள் உட்பட மேலும் பல சேவைகளை உள்ளடக்கியதாக சேவைகள் நடைபெற்று வருகின்றன என்று சபையினர் தெரிவித்தனர். (த-6)

### பொன்னாலையில் டிப்பர் விபத்து

பொன்னாலைப் பாலத்தினூடாக காரைநகர் நோக்கி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.
டிப்பரின் சாரதி காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினார். நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையால் குடிதண்ணீர் விநியோகத்துக்காக பொன்னாலைக் கடற்கரையினூடாக காரைநகர் நோக்கிப் பொருத்தப்பட்டிருந்தகுடிதண்ணீர்குழாயும்சேதமடைந்தது. விபத்து தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்தனர். (ம-21)



# மருத்துவமனையிலுள்ள சடலத்தை அடையாளம் காணுமாறு பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை அநாதரவான நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அது யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அந்தச்சடலத்தை அடையாளம் காணுமாறு பொலிஸார் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.



5 அடி 3 அங்குலம் உயரமும் (வயது - 50) மதிக்கத்தக்க சடலம் கறுப்பு நிற தலை முடியும் சாரம் அணிந்தும் காணப்படுகிறது. முதியவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 021222 2222, அல்லது 0213211258 என்ற இலக்கங்களுக்கு அறியத்தருமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-106)



## மீனவர் வீதியோரத்தில் விற்பனை பயணிகளுக்குப் பெரும் இடைஞ்சல்

மன்னார், ஓக. 12

நானாட்டானில் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட மீன் சந்தைக் கட்டடம் இன்னும் திறந்துவைக்கப்படவிலலை. அதனால் பேருந்து நிலையப் பகுதி மற்றும் வீதியோரங்களில் மீன்விற்பனை இடம்பெறுகின்றது. இதனால் இடையூறுகளை எதிர்கொள்கின்றோம் என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மீன் சந்தை பயன்படுத்தப்படாமல் இருப்பது ஏன் என்றும் நானாட்டான் பிரதேச சபையினரிடம் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் மரக்கறிச் சந்தைத் தொகுதிக்கு அருகாமையில் பல லட்சம் ரூபா செலவில் மீன் சந்தை ஒன்று கட்டப்பட்டது. எனினும் இன்றுவரை பாவனைக்கு விடப்படவில்லை. என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமங்களுக்குள் ஈருருளிகள் மற்றும் உந்துருளிகளில் சென்று மீன்விற்பனைசெய்து வந்த மீனவர்கள் தற்போது மேற்குறித்த பகுதிகளில் வைத்து மீன்விற்பனையில் ஈடுபடுகின்றனர். அதனால் கிராமங்களிலுள்ள மக்கள் குறித்த இடத்தில்கூடி மீன் கொள்வனவு செய்கின்றனர். மீன் கொள்வனவு மக்களுக்குத் தேவையாகவுள்ளது. அதனால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்சந்தையில் வைத்து விற்பனை செய்வதன் மூலமாக மக்கள் அங்கு சென்று மீன் வாங்குவார்கள். அதை ஊக்குவிக்கவேண்டும். அதை விடுத்து புதிய கட்டடத்தை வீணாக்கக்கூடாது. இந்த விடயத்தில் பொதுமக்களின் பணத்தை நானாட்டான் பிரதேச சபை வீண் விரயம் செய்கின்றது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. சில வருடங்களாகப் பயன்படுத்தப்படாமலிருக்கும் குறித்த சந்தையைப் பயன்பாட்டுக்கு விடவேண்டும் என்று அங்குள்ள சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது பற்றித் தவிசாளர் தி.பரஞ்சோதியிடம் கேட்டபோது தெரிவித்ததாவது:

போக்குவரத்துக்கு இடையூறாக பேருந்து நிலையப்பகுதி மற்றும் வீதியோரங்களில் மீன்வியாபாரம் செய்யவேண்டாம் என்று கடந்த வியாழக்கிழமை தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய துண்டறிக்கை அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மீனவர்கள் சந்தைப் பகுதியில் குத்தகைக்காரருடன் பேசி அங்கு விற்கலாம்.

மீன்சந்தை அமைக்கப்பட்டுள்ள இடம் பொருத்தமானதாக இல்லை என்று சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது பற்றியும் ஆராய்கின்றோம் என்று தெரிவித்தார். (த-213)

# ஓலை அர்ச்சனைக் கூடைகளையே கோவில்களுக்குள் அனுமதியுங்கள்

*வவுனியா அந்தணர் ஒன்றியம் கண்டிப்பான வேண்டுகோள்*
*பிளாஸ்ரிக் பொருள்களால் தோல் வியாதி என்றும் தெரிவிப்பு*

வவுனியா, ஓக. 12

ஆலயங்கள் உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தவேண்டும். பனை ஓலையால் பின்னப்பட்ட அர்ச்சனைக் கூடைகளை விற்பதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்யலாம். இவை விலை கூடினாலும் பரவாயில்லை. எந்தக் காரணம் கொண்டும் தோல் வியாதிகள் வரக்கூடிய பிளாஸ்ரிக் உற்பத்திகளை கோவில்களில் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

இவ்வாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி அந்தணர் ஒன்றியச் செயலர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஆலயங்களில் தற்போது திருவிழாக்கள் ஆரம்பித்துள்ளன. தூரதேசங்களிலிருந்து வரும் பக்தர்கள் மற்றும் வெளியூர் பக்தர்கள், உள்ளூர் வாசிகள் எனப் பலரும் ஆலயத்துக்குச் சென்றுவருகின்றனர். அவ்வாறு செல்பவர்கள் இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் பொருட்டு அர்ச்சனைக் கூடைகளைப் பெற்று. அதனை கோவிலில் கொடுத்து அர்சனை செய்வது வழமையான செயல்.

ஆனால் தற்போது தென்னிலங்கை மற்றும் பல பாகங்களிலிருந்தும் வியாபாரிகள் வருகை தந்தும் திருவிழாக் காலங்களில் தங்கள் பொருள்களை விற்கின்றனர்.

அதனால் அதிகமான பிளாஸ்ரிக் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்வதனால் அவற்றின் பாவனைகள் அதிகரிப்பதோடு தோல் வியாதிகள் வர வாய்புள்ளது.

ஓலை அர்ச்சனைக் கூடைகளைக் கொள்வனவு செய்வதன்மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஜீவனோபாயமாகச் செய்பவர்களும் வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம்.

வெளியில்இருந்துவியாபாரிகளையோ அல்லது பிளாஸ்ரிக் பொருள்களையோ ஆலயச் சூழலில் அனுமதியாதீர்கள். இதனூடாக எம்மவர் உற்பத்திகள் அதிகரிக்கும் - என்று அதில் உள்ளது.

(த-110)

### செட்டிகுளம் விபத்தில் மாணவன் படுகாயம்

வவுனியா, ஓக. 12

வவுனியா செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த வாகன விபத்தில் பாடசாலை மாணவனொருவர் படுகாயமடைந்தார்.

உந்துருளியும் முச்சக்கர வண்டியும் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் உந்துருளியில் பயணித்த 19வயதுடைய பாடசாலை மாணவரொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த)



### நாகர்கோவிலில் மாதர் சங்கத்துக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக. 12

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வாரம் நாகர்கோவிலில் நடைபெற்றது.

மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார்.

வடக்கு மாகாண சபையின் சுமார் இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்த நிரந்தரக் கட்டட ஆரம்ப நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஏ.சி. அரியகுமார், அதன் உறுப்பினர் சுரேஸ் குமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் ச.வேந்தன், அரச அலுவலர்கள், கிராம மட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-70)

## தேராவில் துயிலுமில்லக் காணியில் கட்டடம் அமைக்கிறது இராணுவம்

கிளிநொச்சி, ஓக. 12

கிளிநொச்சி தேராவில் துயிலுமில்லக் காணியை விடுவிக்காதுள்ள இராணுவத்தினர், அதில் நிரந்தரக் கட்டடம் அமைக்கின்றனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட தேராவில் மாவீரர் துயிலுமில்லக் காணி போரின் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மாவீரர்களின் பெற்றோர் அருகிலுள்ள காணியில் மாவீரர் நினைவேந்தலைக் கடைப்பிடித்து வருகின்றனர். இந்த நிலையில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டிலுள்ள காணியில் நிரந்தரக் கட்டடம் அமைத்து வருகின்றனர். நினைவுகூருகின்ற இடங்களை வழங்குதற்கு ஜெனீவா அமர்வில் இலங்கை அரசு ஒப்புதல் அளித்திருந்த நிலையில் இவ்வாறு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவது பற்றி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

16 ஏக்கருடைய குறித்த மாவீரர் துயிலுமில்லத்தில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் துயில்கின்றனர். அவ்வாறான இடத்தில் இராணுவத்தினர் நிரந்தரக் கட்டடம் அமைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது பிள்ளைகள் உறங்குகின்ற இடத்தில் நினைவு கூர வாய்பில்லாமல் போய்விடும் என்று மாவீரர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் குறித்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

"எந்தவித அனுமதியும் பெறாது கட்டடம் அமைக்கின்றனர். நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளன. இராணுவ அதிகாரிகளுக்கு இது தொடர்பாகக் கடிதம் அனுப்பப்படும். அதற்குச் சரியான தகவல் கிடைக்காத பட்சத்தில் சபை அமர்வில் அல்லது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (த-6)

# கொழும்பு குப்பைகளால் சிக்கல்: திருப்பியனுப்பினர் புத்தளம் மக்கள்

கொழும்பில் இருந்து புத்தளம் பகுதிக்கு குப்பைகளைக் கொண்டு வந்த பாரவூர்திகளைப் புத்தளத்தைச் சேர்ந்த மக்கள் திருப்பி அனுப்பினர். உலகக் குப்பைகளை புத்தளத்தில் கொட்டவேண்டாம் என்று தெரிவித்து மக்கள் அனைவரும் ஒன்று திரண்டதால் பாரவூர்திகள் வேறு வழியின்றித் திரும்பிச் சென்றன.

கொழும்பு குப்பை அகற்றல் செயற்பாடு மீண்டும் சிக்கலாகியுள்ளது. கழிவுநீர் வடிந்தோடிய நிலையில் புத்தளத்துக்குக் குப்பைகளை கொண்டு சென்ற வாகனங்களை புத்தளம் மக்கள் வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். போராட்டக்காரர்களை கடந்து செல்ல முடியாத நிலையில் வாகனங்கள் திரும்பிச் சென்றன.

பல நாள்களாக கொழும்பு குப்பைகள் அகற்றப்படாமலிருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை தொடக்கம் குப்பை அகற்றுவது வழமைக்கு திரும்பியுள்ளது என்று அரசு அறிவித்திருந்தது. வண்ணாத்துவில்லு பிரதேச சபையுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய, புத்தளம் அருவாக்காடு பகுதியில் குப்பை கொட்ட, கொழும்பிலிருந்து டிப்பர் வாகனங்களில் குப்பை எடுத்துச்செல்லப்பட்டது. வெறும் குப்பையாக அல்லாமல், பொதி செய்த, பதப்படுத்திய குப்பைகளையே புத்தளத்தில் கொட்டுவோம் என அதிகாரிகள் ஏற்கனவே புத்தளம் மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தபோதும், தற்போது கழிவுத் திரவம் வாகனங்களிலிருந்து வடிந்தோடும் நிலையிலேயே குப்பைகள் எடுத்து வரப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் கழிவு வாகனங்கள் சென்ற வீதி களில் துர்நாற்றம் வீசியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து குப்பைகளை எடுத்துச் சென்ற டிப்பர் வாகனங்களுக்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். புத்தளம், வேப்பமடு பகுதியில் ஒன்று திரண்ட மக்கள் கழிவுகளுடன் வந்த டிப்பர் வாகனங்களை வழி மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உலகக் கழிவுகளை புத்தளத்தில் கொட்ட வேண்டாம் என குரல் எழுப்பினர். வாகனங்களை தொடர்ந்து பயணிக்க போராட்டக்காரர்கள் அனுமதிக்காததையடுத்து, கழிவுகளுடன் டிப்பர் வாகனங்கள் திரும்பிச் சென்றன. அதே வேளை, யாழ்ப்பாணத்திலும்தெல்லிப்பழைப் பகுதியிலும்குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பகுதி மக்களும் இது தொடர்பில் அதிகாரிகள், அரசியல் தலைவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டிருந்தது.

(எ-21)

## கூட்டுறவு விவசாயிகள் 150 பேருக்குக் கடன்

வவுனியா, ஓக. 12

மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் நிலக்கடலை விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் 150 பயனாளிகளுக்கு தலா 7 ஆயிரத்து 300 ரூபா கடன் வழங்கும் நிகழ்வு சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் நிதி உதவியுடனும் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆலோசனையிலும் குறித்த கடன்திட்டம் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக பயனாளிகளுக்கான பயிற்சி நெறிகள் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அறுவடையின் பின்னர் வட்டியில்லாமல் குறித்த கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

# குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு வவுனியாவில் 2,166 பேர் பாதிப்பு

## மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கோருகிறார் இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர்

வவுனியா, ஓக. 12

வவுனியா மாவட்டத்தில் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் 3 பிரதேச செயலர் பிரிவுகளில் 622 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 166 பேர் பாதிக்கப்படுகின்றனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார். எனவே பொது மக்கள் தண்ணீரைச் சிக்கனமாகவும் கவனமாகவும் பயன்படுத்தவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரியிலிருந்து தற்போது வரையான காலப்பகுதியில் மழை வீழ்ச்சி மிகக் குறைவடைந்துள்ளது. இதனால் வவுனியா வடக்கில் பிரதேச செயலக பிரிவில் மருதோடை, ஊஞ்சல் கட்டி, வெடிவைத்தகல்லு, நைனாமடு, கற்குளம் உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் 125 குடும்பங்களைச் சேர்ந்த 402 பேர் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஓமந்தை, காத்தார்சின்னக்குளம், மகாறம்பைக்குளம், கள்ளிக்குளம், பம்பைமடு, காத்தான்கோட்டம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 154 குடும்பங்களைச் சேர்ந்த 550 பேரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பாவற்குளம், பெரியபுளியாலங்குளம், கங்கன்குளம், நேரியகுளம், சின்ன சிப்பிகுளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 243 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து194 பேரும் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களுக்குக் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்க மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அந்தப் பகுதி பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு வறட்சியால் பண்ணையாளர்கள், விவசாயிகள் மற்றும் பயிர்செய்கையாளர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் பம்பைமடு மற்றும் கோவில் குளம் ஆகிய கமநல சேவை நிலைய பிரிவுகளில் 120 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளது என்றும் இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-ரி4)

### ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஓக. 12

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிருஸ்ணபுரம் கிராம முதியோர் சங்க உறுப்பினர்கள் 50 பேர் திருகோணமலையில் உள்ள திருத்தலங்களுக்கு நாளை ஆன்மிகச் சுற்றுலா செல்லவுள்ளனர்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கரைச்சி பிரதேச செயலர் ஊடாக இந்தப் பயண ஏற்பாட்டைச் செய்துள்ளது. பயணத்துக்கான அனுசரணையை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமரர் ஆ.க.சிவஞானத்தின் குடும்பத்தினர் வழங்கி உள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் கன்னியா, வெந்நீரூற்று, சிறிலட்சுமி, நாராயணன் கோவில், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கே அவர்கள் சுற்றுலா செல்லவுள்ளனர். (ம-222)

# தமிழருக்கு வீடுகள் கட்டித்தரும் அமைச்சர் சஜித் கொக்கிளாயில் சிங்களக் குடியேற்றம் செய்கிறார்

## இவருக்கு எப்படி நாங்கள் வாக்களிப்பது என்கிறார் சார்ள்ஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 12

25 வீடுகளைக் கட்டிக்கொடுத்து 30 சுவரொட்டிகளை ஒட்டி, கால்பந்து விளையாடி விட்டு தனக்கு வாக்களிக்குமாறு அமைச்சர் சஜித் பிரேமதாச கோருகின்றார். இதே சஜித் பிரேமதாசவே, முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றம் ஒன்றை அமைக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றார். அதை நாங்கள் தடுத்து நிறுத்தியபோதும் சஜித்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தியே வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இப்படியான நிலைப்பாட்டில் இருக்கும் ஒரு அமைச்சருக்கு நாங்கள் எவ்வாறு ஆதரவு வழங்குவது?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

25 வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு 30 சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு கால்பந்து விளையாடி, கடலில் குளிப்பவருக்கு வாக்குப்போட வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாது:

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, உரிமை விடயங்களின் தீர்வு தொடர்பாக பகிரங்கமாகவாக்குறுதிவழங்குபவருக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். அதைவிடுத்து மக்களின் முன்பாக கால்பந்து விளையாடுபவர்களுக்கும், கடலில் குளிப்பதாகக் கூறுபவர்களுக்கும் வாக்களிக்கமாட்டார்கள், ஆதரிக்கவும் மாட்டார்கள்.

நாடுமுழுவதும் அடுத்த அரசதலைவர் வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒரு பக்கம் பொதுமக்கள் முன்னணி சார்பாக கோத்தபாய ராஜபக்சவின் பெயரும், மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக சஜித் பிரேமதாசவின் பெயரும் இன்னும் பலரின் பெயர்களும் பத்திரிகைகளில் வந்த வண்ணமுள்ளன. இவர்களில் எந்த வேட்பாளர்களுக்கு எந்தக் கட்சியினர் ஆதரவளிக்கப் போகின்றார்கள் என்ற விடயமும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

அரசதலைவர் வேட்பாளராக யார் வந்தாலும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் குறிப்பாக இரண்டு வருடங்களுக்கு முன்பாக வழிநடத்தல் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட யாப்பு சார்ந்த விடயங்களில் தமிழ் மக்களின் காணிகளுக்குள் பூர்வீக நிலங்களுக்குள் நடைபெறும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் தொடர்பாகவும் தமிழ்ப் பகுதிக்குள் அதிகளவான மாற்று இன அரச நியமனங்கள் வழங்கல் தொடர்பாகவும், அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவோம் என்று பகிரங்கமாக எவர் வாக்குறுதி தருகின்றார்களோ அவர்களுக்கு மத்திரமே இந்தமுறை தமிழ் மக்களும் ஆதரவு கொடுப்பார்கள். நானும் ஆதரவு கொடுப்பேன்.

அத்துடன், "தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாவிட்டாலும் நான் வெற்றி பெறுவேன்" என்று கோத்தாபாய ராஜபக்ச அண்மையில் கூறியுள்ளார் என்று ஊடகங்கள் மூலமாக அறிந்தேன். உண்மையில் சஜித் பிரேமதாசவாக இருந்தாலும் கோத்தபாய ராஜபக்சவாக இருந்தாலும் எவராக இருந்தாலும்சிறுபான்மைச் சமூகத்தின் வாக்குகள் இல்லாமல் நிச்சயமாக அரசதலைவராக முடியாது.

கோத்தாபாய ராஜபக்ச இறுதிப்போர்க் காலத்தில் தமிழ் மக்களின் கருவறுத்தவர். அவர் எந்த அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்கை கோருகின்றார்?.

எனவே தேர்தல் அறிவிப்பு வரும்போது எவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நேரடியாகத் தீர்க்கக்கூடியதாக வாக்குறுதி வழங்குகிறார்களோ அவர்களுக்கே எங்கள் ஆதரவு எனத் தெரிவித்துள்ளார். (த-21,105)

### சாவகச்சேரி மாதர் சங்க கூட்டம்

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி இல்லத்தில் நடைபெறும். சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பயணிகள் சோதனை தற்போதும் நீடிக்கிறது

## மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஓக. 12

உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல்களை அடுத்து நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் சோதனை நடவடிக்கைகள் வடமாகாணத்தில் தற்போதும் தொடர்கின்றன - என்று அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் வடக்கில் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டிருந்தது. முதன்மை வீதிகள், சந்திகள் அனைத்திலும் சாலை மறியல் சோதனைகள், திடீர் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. வாகனங்கள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டு மக்கள் இறக்கி ஏற்றப்பட்டனர். தாக்குதல் இடம்பெற்றதன் பிற்பாடு நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு பல்வேறு இடங்களில் சோதனைகள் தளர்த்தப்பட்ட போதிலும்,, வடமாகாணத்தில் பல இடங்களில் பயணிகள் சோதனைகள் தொடர்ந்துகொண்டே உள்ளன. இதையடுத்தே மேற்படிநடவடிக்கைக்கு அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (ம-7220)



# இரு மாதிரிக் கிராமங்களை கையளித்தார் சஜித்

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வந்திருந்த அமைச்சர் சஜித் பிரேமதாச, இரு மாதிரிக் கிராமங்களை மக்களிடம் கையளித்ததுடன், அறநெறிப் பாடசாலை ஒன்றையும் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் உள்ள யாழ்ப்பாணம்சென். மாாட்டீன்தேவாலயத்தின் சீரமைப்புப் பணிகளையும் உத்தியேகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். சீரமைப்புப் பணி ஆரம்பத்துக்கான அடிக்கல்லையும் திரைநீக்கம் செய்தார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதன்பின்னர் வலிகாமம் மேற்கில் அமைக்கப்பட்ட செந்தமிழ் கிராமம் மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்தார். அதன் பின்னர் தென்மராட்சியில் அமைக்கப்பட்ட திருவேரபுரம் மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-ரி1,26)

# சாவகச்சேரி பிரதேச சபையை 18 உறுப்பினர்கள் குழப்புகின்றனர்

## அதன் தவிசாளர் தெரிவிக்கிறார்

கொடிகாமம், ஓக. 12

சாவகச்சேரி பிரதேசசபையில் தற்போதுள்ள 31 உறுப்பினர்களில் 13 பேர் (ஆளும்கட்சி) ஒத்துழைப்பாகவும் ஆதரவாகவும் இருக்கிறார்கள். மிகுதி 18 பேர் எம்மை வீழ்த்துவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். சபையில் கூட்டத்தைத் தொடங்கினால் 18 பேரும் குழப்பும் நடவடிக்கைகளைத்தான் செய்கிறார்கள். இவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. கட்சி என்ற விடயம் எம்மைக் கட்டுப்படுத்துகிறது. எவருக்கும் பதில் சொல்லக்கூடியதாக அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்பவர்களாகவும் நாம் இருக்கிறோம். இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசங்களின் முக்கியமான இடங்களுக்கு வீதி விளக்குகளை பொருத்துவதை இலக்காகக் கொண்டு பொது மக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளினுடைய வேண்கோளின் பிரகாரம் பொருத்தமான இடங்களில் மின் விளக்குகளைப் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி 'உதயன்' அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**சின்னாபின்னமாகியுள்ள தென்மராட்சிக்கு உதவிகள் மிகக் குறைவு**

தென்மராட்சிப் பகுதி கடந்த 30 ஆண்டுகளாக போரில் சிக்கி சின்னாபின்னமாகி பல்வேறு தேவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், யானைப் பசிக்கு சோளப்பொரி என்பதுபோல அபிவிருத்திக்கான வேலைகள் அடையாளம் காணப்படுகின்றன.

**சரவணபவன் எம்.பி. பலவழிகளில் உதவுகிறார்**

2018 ஆம் ஆண்டு எங்களுடைய வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்து அதன் அடிப்படையில் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தோம். கிராம எழுச்சித் திட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபைக்கு இதுவரையில் 200 மில்லியன் ரூபா கிடைத்தது. அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பல்வேறு நிதிகள் அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கிடைத்துள்ளன.

**பல திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளார்.**

அவர் இந்தப் பகுதி சார்ந்த மக்களின் அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். நேரத்தையும் காலத்தையும் செலவழித்து ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் சென்று நிதிகளைப் பெற்று வழங்குகின்றார்.

சிலர் தாங்கள் நினைத்தவுடன் வேலைகளைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். வேலைத் திட்டங்களை வழங்க வேண்டும் என்றால் மதிப்பீட்டை செய்து கொடுக்க வேண்டும். தொழில் நுட்ப அலுவலர்கள் 3 பேர் இருக்கிறார்கள். எவராவது வந்து வேலைத் திட்டத்துக்காக மதிப்பீடுகளைச் செய்து தருமாறு கேட்டால் என்னாலான முயற்சிகளைச் செய்கின்றேன்.

**தாமதமாகவே தென்மராட்சிக்கு நிதி**

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய பிரதேச சபைகளுக்கு சென்றவருடம் கிராம எழுச்சித் திட்டத்தில் 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. சாவகச்சேரிக்கு சித்திரை, வைகாசியில்தான் 200 மில்லியன் கிடைக்கப்பெற்றது. நிர்வாக ரீதியாக பெரும் சிக்கல் நிலை காணப்படுகிறது. பிரதேசசெயலகமா பிரதேசசபையா செய்வது என்ற பிரச்சினை உண்டு. இது கொழும்பு அரசில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை. அதைச் சாதாரணமான மக்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கப்படுகின்ற கிராம எழுச்சி வேலைத் திட்டங்களுக்கு அந்த நிதி ஒதுக்கப்படும் விடயத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் பணி என்பது வெறுமனே வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீட்டைச் செய்வதும் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த வேலைகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதும் அதற்கான கொடுப்பனவைப் பரிந்துரை செய்வதுமே. வேலைகள் எவருக்குக் கொடுக்க வேண்டும், எந்த வகையில் கொடுக்கப்பட வேண்டும் என்பன பிரதேச செயலரே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. எங்களால் முடிந்தவரை எங்களுடைய வேலைகளைத் திறமையாகச் செய்து வருகின்றோம். வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதியிடம் 13 வேலைத் திட்டங்களையும், வீதி விளக்குகளுக்காக 2.5 மில்லியனுக்கான வேலைத் திட்டங்களையும் தயாரித்து வழங்கியுள்ளேன். அவை கிடைக்கக் கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மனிதனையும் திருப்திப்படுத்துவதாக நாம் வேலை செய்ய முடியாது. நிர்வாக ரீதியாக நிர்வாகத்திலிருப்பவர்களுக்குத்தான் தெரியும்.

**அரச சுற்றறிக்கைக்கு ஏற்பவே செயற்படலாம்**

நாம் வேலைகளைச் செய்யும்போது எங்களுக்கென்றுள்ள அரச சுற்றறிக்கைக்கு ஏற்பவே வேலைத் திட்டங்களைச் செய்ய முடியும். எமது அவசரத்துக்காகச் செய்ய முடியாது.

**ஆக்கபூர்வமானவையாக விமர்சனங்கள் இருக்கவேண்டும்**

பதவியை ஏற்றுக்கொண்டுள்ளோம். நல்ல வழியில் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல வேண்டும். கட்சியின் பலத்தைக் காப்பாற்ற வேண்டும். மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் கிடைக்க வேண்டும். நாமும் எமது சபையும் என்றும் தயாராக உள்ளோம். வெறுமனே விமர்சனங்களை விமர்சிக்க முடியாது. விமர்சனங்களை எவரும் முன் வைக்கலாம். அது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும்.

**குப்பை**

இந்த இடத்தில் மக்களுக்குஒருவிழிப்புணர்வு வேண்டும். வீதி வீதியாகக் குப்பைகளைக் கொட்டுகிறார்கள். வீடுகளில் குப்பை போடுவதற்கு இடமில்லையா? மக்களும் விழிப்புணர்வு உள்ளவர்களாக சமூகப் பொறுப்புக்களைஉணர்ந்தவர்களாக செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் நிச்சயமாக நல்ல சேவையை வழங்க நாம் என்றும் தயாராக உள்ளோம்- என்றார். (த-59)

செஞ்சோலையில் தூபி அமைக்கலாம்

# பெயர்கள், படங்கள் பொறிக்கத் தடை

## புதுக்குடியிருப்புப் பொலிஸார் அடாவடி என்று விசனம்

முல்லைத்தீவு ,ஓக. 12

பிரதேச சபையின் அனுமதியுடன் செஞ்சோலை நினைவுத்தூபி அமைக்கலாம் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால் அதில் கொல்லப்பட்டவர்களின் படங்கள் எதுவுமே காட்சிப்படுத்தவோ வரையவோ கூடாது என்று தடை விதித்துள்ளனர் என்று தூபி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.



வானூர்திப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் நினைவுத் தூபி ஒன்று வள்ளிபுனம் பகுதியில் அமைக்கப்பட்டு வந்தது. இந்த நினைவுத் தூபியில் மாணவர்களின் படங்களைப் பதிப்பதற்குத் தடை விதித்துள்ள புதுக்குடியிருப்புப் பொலிஸார் குறித்த பணிகளை முன்னெடுத்தவர்கள் சிலரை நேற்றுக் காலை புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்திருந்தனர்.

நினைவுத்தூபிஅமைக்கும் பணிக்குபிரதேசசபைகடந்த வருடம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது அமைக்கும் பணியைத் தொடங்கியபோது சபையின்அனுமதிகாலாவதியாகிவிட்டிருந்தது. நாளை 13 ஆம்ஆண்டுநினைவேந்தல் இடம்பெறவுள்ளநிலையில் தூபிஅமைக்கும்பணியை புதுக்குடியிருப்புப்பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர். விசாரணைக்குச் சென்றவர்களை விசாரித்த பொலிஸார், பிரதேச சபையின் அனுமதியுடன் தூபி கட்டும் பணியை முன்னெடுக்கலாம் என்று கூறியுள்ளனர். எனினும், கொல்லப்பட்டவர்களின் படமோ அல்லது பெயரோ நினைவுத்தூபியில் பொறிப்பதற்குப் பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உட்பட ஏனைய பகுதிகளில் படையினர் அமைக்கும் நினைவுத்தூபிகள் பிரதேச சபையின் அனுமதி எடுத்தா கட்டப்படுகின்றது? இந்த நினைவு நிகழ்வைக் குழப்பும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைக்குச் சென்றிருந்தவர்கள் விசனம் தெரிவித்தனர்.

பொலிஸாரின்விசாரணைக்காக வன்னிக்குறோஸ் நினைவேந்தல் குழுவைச் சேர்ந்த முல்லைஈசன், சந்திரரூபன் உள்ளிட்ட மூவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (நு7,ரி3)



ஒட்டுசுட்டான் சம்மளங்குளத்தில்

# கிணற்றில் வீழ்ந்து யானை உயிரிழப்பு

## விவசாயிகளுக்கு தொல்லை கொடுத்ததாம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட சம்மளங்குளம் பகுதியில் விவசாயக் காணியிலுள்ள கிணற்றில் காட்டுயானை ஒன்று விழுந்து உயிரிழந்துள்ளது.

விவசாயிகள் விவசாயம் செய்யும்கிணற்றில் கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் குறித்த யானை இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சம்மளங்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக தண்ணீருக்காக யானை அலைந்து திரிந்து கிணற்றில் வீழ்ந்திருக்கலாம் - என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-ரி3)

### கண்டியில் சிறப்புற இடம்பெற்றது கத்தோலிக்க இளைஞர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக. 12

76ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் இந்தமாதம் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் கண்டி மறைமாவட்டத்தில் அமைந்துள்ள அம்பிட்டிய தேசிய குருமடமெய்யியல் பிரிவு வளாகத்தில் இடம்பெற்றது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். 77ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் கார்த்திகை மாதம் சிலாபம் மறைமாவட்டத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# திருமலை மாணவர்கள் கொலை: சட்டத்தில் சீர்த்திருத்தம் தேவை

## வலியுறுத்துகின்றது மன்னிப்புச் சபை

கொழும்பு, ஓக.12

திருகோணமலையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் 5 தமிழ் மாணவர்களின் கொலை தொடர்பாக மீண்டும் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கையின் சட்டமா அதிபர் எடுத்திருக்கும் தீர்மானத்தை பன்னாட்டு மன்னிப்புச் சபை வரவேற்றுள்ளது. இந்த விசாரணைகள் பயனுறுதி உடையவனாக இருக்க வேண்டுமானால் சில சீர் திருத்தங்கள் அவசியம் என்றும் கூறியுள்ளது.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 13 பேர், அவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டு திருகோணமலை மேன் நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது. அதை அடுத்தே இந்த மீள் விசாரணைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் பன்னாட்டு மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைப்பதை உறுதி செய்வதற்கும், இந்தக் கொலைகள் தொடர்பான நீதி கிடைக்கப்பெறுவதற்கும் முழுமையானதும், கண்டிப்பானதும், பயனுறுதி உடையதுமான பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்பதையும் பன்னாட்டு மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30(1) தீர்மானத்தின் பிரகாரம் பன்னாட்டு மனித உரிமைகள் சட்டம் மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் என்பன மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உள்நாட்டு நீதிமன்ற முறைமை ஒன்றினூடாக அல்லது சிறப்புச்சட்டவாதி ஒருவரை உள்ளடக்கிய நீதிமன்றப் பொறிமுறை ஊடாக விசாரணை செய்து கொலைகளினால் பாதிக்கப்பட்டவர்களால் நீதி கிடைக்கச்செய்வதற்கு பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கை அரசு கடப்பாடு உடையதாக இருக்கின்றது என்றும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

திருகோணமலை மாணவர் கொலைகள் குறித்து பயனுறுதியுடைய முறையில் விசாரிப்பதற்கும், பொறுப்புக்கூற வைப்பதற்குமாக சாட்சிகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தற்போது வசிக்கின்ற நாடுகளிலிருந்து பரஸ்பர சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

திருகோணமலையில் 5 மாணவர்களினதும் சடலங்களை ஒளிப்படம் எடுத்த ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜன் சம்பவத்துக்கு ஒருசில வாரங்கள் கழித்து கொலை செய்யப்பட்டார்.

கொலையுண்ட மாணவர்களில் ஒருவரான ரஜிஹரின் தந்தையாரான டாக்டர் கே. மனோகரன் கொலை அச்சுறுத்தல்களை அடுத்து நாட்டைவிட்டுத் தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார். இந்த வழக்கில் சாட்சியமளிக்கும் பட்சத்தில் தான் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை அவர் தொடர்ந்தும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கொலையுண்ட ஏனைய மாணவர்களின் குடும்பத்தவர்களும் சம்பவத்தில் உயிர் தப்பிய இளைஞர்களும்கூட இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்களாலும், சாட்சிகளாலும் வெளிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அச்சங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இலங்கைக்கு வெளியே இருக்கும்சாட்சிகளும் பாதிக்கப்பட்டவர்களும் விசாரணைகளில் பங்கேற்பதற்கு, வசதி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் குற்றச்செயல் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களின் பாதுகாப்புக்கான சட்டத்தில் இலங்கை அரசு திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை கூறியிருக்கிறது.

சாட்சிகளும், பாதிக்கப்பட்டவர்களும் தற்போது வசிக்கின்ற வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களிலிருந்து சாட்சியளிப்பதற்கும் வசதி செய்வதற்கும் அப்பால் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யக் கூடியதாக அந்தச்சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் மன்னிப்புச்சபையின் அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (எ-61)



## மந்திகை மருத்துவமனைக்கு சுவாச ஊக்குவிப்புக் கருவி

கொடிகாமம், ஓக.12

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு நோயாளர் சிகிச்சைக்கு, அத்தியாவசியமான ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சுவாச ஊக்குவிப்பு மருத்துவக்கருவி வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள், குறித்த கருவியை இங்கிலாந்திலிருந்து தருவித்து மருத்துவமனை அத்தியட்சகர் த.குகதாசனிடம் நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளனர்.

நிகழ்வில் புலம்பெயர் மருத்துவர்கள் சார்பாக மருத்துவர் பார்த்தீபன் மற்றும் மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர், பதில் மருத்துவ அத்தியட்சகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த இயந்திரம் மூலமாக இனிவரும் காலங்களில் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பயனடைவர் என்று நம்பப்படுகிறது. (த-159)

## யாழ்.மேயரின் வாகனத்தை திருப்பி ஒப்படைக்க ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பயன்படுத்திய வாகனம், வடக்கு மாகாண ஆளுநரால் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தை மீளவும் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண மாநகர முதல்வரை ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் பாவனையிலிருந்த வாகனம் பழுதடைந்திருந்தது. இது தொடர்பில் வடக்கு ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. மாநகர முதல்வரின் பயன்பாட்டுக்கு புதிய வாகனக் கொள்வனவுக்கும் அனுமதி கோரப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபை அதன் ஆட்சிக் காலத்தில் 45 மில்லியன் ரூபா செலவில், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கான சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்திருந்தது. மாகாண சபையின் ஆட்சிக் காலம் முடிவடைந்த பின்னர் அந்த வாகனங்கள் ஆளுநர் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. முதலமைச்சர் பயன்படுத்திய வாகனத்தை, ஆளுநர் மாநகர முதல்வருக்கு வழங்கியிருந்தார்.

இந்த விடயம் அரச தலைவர் செயலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இவ்வாறான தொரு நிலையில், மாநகர முதல்வருக்கு வழங்கிய வாகனத்தை மீள ஒப்படைக்குமாறு ஆளுநர் கோரியுள்ளார். மாநகர முதல்வரும் அதனை ஒப்படைக்க இணங்கியுள்ளார். (ஒ,5,105)

## உருவச்சிலை திறப்பு விழா!

யாழ்ப்பாணம், ஓக. 12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்ப கர்த்தாவான அமரர் மு.சிவசிதம்பரத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. கரவெட்டி பெரியதோட்டம் பகுதியில் தா.சிறிஸ்கந்தசிங்கம் தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் நிகழ்வு நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்ளவுள்ளார். நினைவுரையை மூத்த ஊடகவியலாளர் வீ. தனபாலசிங்கம் ஆற்றவுள்ளார். (ம)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்றுஞாயிற்றுக்கிழமை, கோப்பாய்ப் பிரதேச செயலகப்பிரிவைச்சேர்ந்த திருமதி கமலராணிபாஸ்கரநாதசர்மாவின்மாணவர்களின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லூர்உற்சவகாலத்தைமுன்னிட்டுஇந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் இடம்பெறுகின்றது.

★ ★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்த புராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வின் ஐந்தாம் நாளான இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் இந்துக் குருமார் அமைப்பின் செயலாளர், பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா ஆகியோர் முன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில், யாழ்ப்பாணம், கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி, கலாநிதி பா.தனபாலன் முதன்மை விருந்தினராகவும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர், கலாநிதி திருமதி.சுகன்யா அரவிந்தன்சிறப்புவிருந்தினராகவும்கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மயிலணி முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் சொக்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூன்றாம்அணி, ஆன்மிகப்பிரசாரகர்க.பிரகானின் 'யாரிது தீர்க்கற்பாலர்?' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்புச்சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள்உள்ளடங்கியவினாத்தாள்வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக தரங்கினிபாலமுருகன் மற்றும் பாலமுருகன் தரன்ஜன் ஆகியோரின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 7.15 வரை குழு இசை இடம்பெறும். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் பழைய ஆசிரிய மாணவர்கள்வழங்குவர். வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் சி.மகேந்திரன், நெறியாள்கை விக்கினேஸ்வரி நரேந்திரா.

இரவு 7.15 தொடக்கம் 8.15 வரை இசைக்கச்சேரி இடம்பெறும். இதில் பாட்டு எம்.எஸ்.பிரதீபன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ம.லோகேந்திரன், கெஞ்சிரா எஸ்.சுலக்சன் ஆகியோர் நிகழ்த்துவர். (து)


## அரச தலைவர் செயலகத்துக்கு மாகாண சபையின் வாகனங்கள்

### திடீர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 12

வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் அரச தலைவர் செயலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள் என. இந்தத் திடீர் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பது இதுவரை தெரியவரவில்லை.

வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்கள், ஆளுநர் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஓர் வாகனம், மாநகர முதல்வரின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனையும் மீள ஒப்படைக்குமாறு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஆளுநர் செயலகத்திலிருந்த இரண்டுவாகனங்கள் அரச தலைவர் செயலகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. ஆயுள் காலம் முடிவடைந்த ஏனைய மாகாணங்களிலிருந்தும் இவ்வாறு வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. என்ன காரணத்துக்காக இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டது என்பது இது வரை தெரியவரவில்லை. அரச தலைவர் தேர்தலுக்கான முன்னாய்த்தமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ஒ,5,105)



வவுனியாவில்

## 600 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள்!

வவுனியா, ஓக. 12

வவுனியா மற்றும் மன்னாரில் தென்னை பயிர்செய்கையை மேற்கொள்ளும் 600 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்களை பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க நேற்று வழங்கினார்.

வவுனியா சாம்பல் தோட்டம் ஸ்ரீ சாய் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தே இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. 300 பயனாளிகளுக்கு காசோலைகளும் 300 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுமே அவ்வாறு வழங்கப்பட்டன. (ம-7)

## நில அபகரிப்புக்குத் தீர்வு இல்லையேல் ஒரு வருடத்தில் புலம்பெயரும் நிலை

*கொக்குத்தொடுவாய் மக்கள் கவலை*

முல்லைத்தீவு, ஓக. 12

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இடம்பெறும், நில அபகரிப்புகளுக்குத் தீர்வு பெற்றுத் தராவிட்டால், தமது பகுதிகளிலிருந்து இன்னும் ஒருவருடத்துக்குள் தாம் வெளியேறும் நிலை ஏற்படுமென்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் அங்கு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டிருந்த வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், ப.சத்தியலிங்கம் ஆகியோரிடமே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கொக்குத் தொடுவாயில் 1984ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த குளத்தின் கீழான விவசாய நிலங்கள் அனைத்தும் அபகரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படாதிருக்கின்ற நிலையில், தற்போது ஏனைய பகுதிக் காணிகளும் அபகரிப்புச் செய்யப்படும் முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கின் றது.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாடுகள் சில அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்தான் இடம்பெறுகின்றன என்பதை நாம் உணர்கின்றோம். ஏனெனில் அரச அதிகாரிகளிடம் அபகரிப்புகள் தொடர்பில் தெரியப்படுத்தும்போது நீங்கள் ஏன் அங்கு செல்கின்றீர்கள் என்பது மாதிரியான கேள்விகளைக் கேட்கின்றனர்.

நாங்கள் இந்த அபகரிப்புகள் தொடர்பில் பல தடவைகள், பலரிடமும் தெரியப்படுத்தியிருந்தபோதும் எவ்வித தீர்வுகளும் கிடைக்கவில்லை.

இந்த அபகரிப்புப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைப் பெற்றுத் தராவிட்டால், இன்னும் ஒருவருடத்துக்குள் எமது பகுதிகளை விட்டு வெளியேறும் நிலைதான் ஏற்படும்.

அங்கு அந்தக் காணிகளை விட்டால் எமக்கு எந்தவித தொழில் வாய்ப்புகளுமில்லை. வாழ்வாதார காணிகள் அனைத்தையும் சிங்கள மக்கள் அபகரித்துள்ளனர். நாம் தொழிலுக்கு வேறு கிராமங்களுக்கு போகவேண்டிய நிலையே உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, அபகரிக்கப்படாது மீதமாக இருக்கின்ற காணிகளை யாவது கைப்பற்றித் தர வேண்டும் என்ற நோக்கில், காணிகளைத் துப்புரவு செய்வதற்கு 20மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டு ஆறு மாத காலமாகியும் வேலைகள் ஆரம்பிக்கப்ட வில்லை.

இது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் கேட்டிருந்தோம். இதுவரையில் வேலைகள் இடம்பெறுவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான நிலையில் அந்த நிதியும் திரும்பும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. மழைக் காலம் அண்மித்துவிட்டதால், இனி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து மேற்கொள்ளவும் முடியாது எனக்கூறக்கூடும் என்று தெரிவித்தனர்.

அவை தொடர்பில் ஆராய்கிறோம் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (து-246)

# தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு இவற்றை அடைவதே எமது இலக்கு

*விக்னேஸ்வரன் வவுனியாவில் தெரிவிப்பு*



வவுனியா, ஓக.12

தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவுஎன்பனவற்றை அடைவதே எமது கட்சியின் இலக்கு என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளை அலுவலகம் வவுனியா - மன்னார் வீதி கற்பகபுரம் பகுதியில் நேற்றுமுற்பகல் திறந்துவைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சி மூன்று விதமான அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளது.

### தன்னாட்சி

வடக்கு - கிழக்கு இணைந்த நிலையில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே நிர்வகிக்கக்கூடிய அதிகாரங்களை பெறவேண்டும்.

அரசு வடக்கு - கிழக்கை மேலும் பிரிக்கும் செயற்பாட்டையே மேற்கொண்டு வருகின்றது. அதனால் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் வசிக்கும் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுவருகின்றனர். எனவே அரசியல் ரீதியாக தன்னாட்சியை பெறுவதற்கு நாம் பயணிக்க வேண்டும்.

### தற்சார்பு

எமது வாழ்க்கை முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்காக தற்சார்பு என்ற கொள்கையை அடுத்ததாக நாம் வகுத்துள்ளோம். நாம் எப்பொழுதும் அடுத்தவரைப் பார்த்து அவர்களிடம் பிச்சைகேட்கும் நிலையைமாற்றி எங்களை நாங்கள் மேம்படுத்த முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு எமது அறிவுரைகளுடன், உங்களுடன் இணைந்து அவற்றை செய்ய எமது கட்சி காத்திருக்கின்றது.

### தன்னிறைவு

வடக்கு - கிழக்கு மக்கள் பொருளாதார ரீதியாகத் தங்களை வளர்த்துக் கொண்டு, தன்னிறைவு பெறக்கூடிய ஒரு பிராந்தியமாக வரவேண்டும் என்பது எமது அவா. அதனை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை நாம் அறிந்து ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமக்குத் தேர்தல் ரீதியான எண்ணங்கள் இருந்தாலும், அதனையும் பார்க்க மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு கட்சியாக வளரவேண்டும் என்பதே எமது அவா! அதற்கு ஏற்ற விதத்தில் எமது செயற்பாடுகள் அமையும் -என்றார்.

### இளங் கட்சி

எமது கட்சி இளங் கட்சியாக உள்ளது. இன்னும் ஒரு வயதுகூட ஆகவில்லை. நாங்கள் கொஞ்சம்கொஞ்சமாக முன்னேறி வருகின்றோம். எங்களைத் தேடிவருகின்ற மக்கள் யாழ்பாணத்துக்கு வருகின்ற நிலையை மாற்றி உரிய இடங்களிலேயே தமது குறைகளைக் கூறி எம்முடன் அளாவுவதற்காகவும், அவர்களின் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவுமே இந்தக் கட்சிக் காரியாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன.

எங்களுக்கு நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களின் மூலம் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றோம். கட்சி ரீதியாக எங்களுடன் இணைந்து பயணிப்பவர்களும் இங்கு வந்துசெயற்படலாம் என்று தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த அலுவலகம் திறக்கும்நேரத்துக்குவிக்னேஸ்வரன் சென்றிருந்தபோதும் ஆதரவாளர்கள் ஒருசிலரே காணப்பட்டுள்ளனர். அதனால் சிறிது நேரம் அவர் வாகனத்தில் காத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-110)

## விபத்துச் சிகிச்சைக்குச் சென்றபோது மருத்துவர் போதையில் இருந்தாரா?

*குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டால் நடவடிக்கை என்கிறார் பிராந்தியப் பணிப்பாளர்*

மன்னார், ஓக. 12

விபத்தில் படுகாயமடைந்தவர்களை நானாட்டான் மருத்துவமனையில் சேர்த்தபோதுமருத்துவர் போதையில் இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதனால் காயமடைந்திருந்த இருவரும் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நானாட்டான் அரிப்புத் துறை வீதியில் நேற்றுமுன்தினமிரவு 7 மணிக்கு இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அவற்றின் சாரதிகளான இருவரும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் நானாட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் அங்கே கடமையில் மருத்துவர் எவரும் இருக்கவில்லை. சிறிது நேரத்தில் விடுதியிலிருந்து மருத்துவர் ஒருவர் வந்தார். அவர் போதையில் காணப்பட்டார் என்றும் அதனால் காயமடைந்தவர்களை ஏற்றிவந்திருந்தவர்கள் கோபமடைந்து விசனம் தெரிவித்தனர். இது அங்கு பரபரப்பான நிலைமையை ஏற்படுத்தியது.

வேறுவழியின்றி காயமடைந்த இருவரும் நோயாளர் காவுவண்டியில் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.


மருத்துவமனையில் மருத்துவர் கடமையில் இருக்கவில்லையே ஏன் என்று நானாட்டான் பிரதேச மருத்துவமனை மருத்துவரிடம் கேட்டபோது, தனது கடமை நேரம் முடிந்து விட்டதாகத் தெரிவித்தார்.

மருத்துவர் போதையில் இருந்தது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் காண்டீபனிடம் கேட்டபோது,

"குறித்த மருத்துவர் பற்றிய முறைப்பாடுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன. விடுமுறை நேரம் எனில் முறையாக எமக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் அப்படி செய்யவில்லை. கடமை நேரத்தில் போதையில் இருந்தது உறுதி செய்யப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

கட்டையடம்பன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் அச்சங்குளம் நானாட்டானைச் சேர்ந்த தேவா மற்றும் நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த இளைஞருமே விபத்திற்குள்ளானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-213)



## றீகன் ஸ்டார் கழகத்துக்கு மின்னொளியும் கட்டடமும்

மன்னார், ஓக. 12

மன்னார் றீகன் ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்துக்கு மின்னொளி வசதியையும், கழக பயன்பாட்டுக்கு சிறிய கட்டட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் ஒதுக்கீட்டில் மேற்படி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறித்த கட்டடம் சிவமோகனால் நேற்று முன்தினம் கழகத்துக்குக் கையளிக்கப்பட்டது. குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் வன்னி மாவட்ட இணைப்பாளர் ச.ரூபனும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டார்.

(ம-213)

# பரப்புரைகளில் இன்று இறங்குகின்றார் சஜித்!

கொழும்பு, ஓக.12

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பான இழுபறிகள் நீடிக்கின்ற நிலையில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாச இன்று பரப்புரைகளை ஆரம்பிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.




அரச தலைவர் வேட்பாளர் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே இழுபறிநிலை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், சஜித் பிரேமதாசவை போட்டியில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தும் அணியினரின் சார்பில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இன்று பதுளையில் பெரும் பேரணி ஒன்றை நடத்தவுள்ளார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான இந்தப் பேரணி, அவரது தேர்தல் பரப்புரையின் தொடக்கமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைப் பேரணியாக இந்தப் பேரணியை நடத்துவதாக, அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகில விராஜ் காரியவசத்துக்கு அறிவித்துள்ளார்.

எனினும், இந்த மாநாட்டில் கட்சியின் நடத்தை விதிகளை மீறினால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலர் எச்சரித்துள்ளார். (எ)



## சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பெரமுனவுடன் செயற்பட முடியும்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் (பொதுஜன பெரமுன) இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படமாட்டாது. அவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட எந்தத் தடையும் இல்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் விஜேராம மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தில் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் அனைவரும் இலங்கையர்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தமையினாலேயே நாம் கட்சியிலிருந்து விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதைத்தவிர எமக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் வேறு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை.

தற்போது மீண்டும் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் தற்போது நாம் ஒன்றிணைந்து செயற்படுவதில் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அநீதி இழைக்கப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

2015 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் என்னுடைய வெற்றிக்காகவே பாடுபட்டார்கள் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். மிகச் சிறிய குழுவொன்று மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சிக்காகப்பாடுபட்டது. அதைத் தற்போது சிலர் மறந்துவிட்டார்கள்.

எனினும் அரசியலில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஒவ்வொரு வாக்குகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே இருக்கும். கடந்த வாரம் எனக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு சுமுகமானதொரு சந்திப்பாக அமைந்தது. அந்தச் சந்திப்பின்படி அவர் சிறந்தவொரு தீர்மானத்தில் இருக்கின்றார் என்று நான் நம்புகின்றேன். அதனால் எமக்கு ஒன்றிணைந்து பயணிப்பது கடினமானதல்ல.

பொதுமக்கள் முன்னணியின் சம்மேளனத்தில் நாம் வேட்பாளரை அறிவிப்போம். அதைத் தொடர்ந்து தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்களுடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (எ)

## சட்டத்தரணி நீக்கப்பட்டார்

கொழும்பு, ஓக.12

சட்டவிரோதமாகக் கருத்தடைச் சிகிச்சை செய்தார் என்று கூறப்படும் குருநாகல் மருத்துவர் ஷாபிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுபவர்கள் சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகி வந்த சட்டத்தரணிகளில் ஒருவரான இந்திரிசிறி சேனரத்ன இனி அந்த வழக்கில் முன்னிலையாக முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கருத்தடை சிகிச்சை மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட குருநாகல் மருத்துவனையின் மகப்பேற்று நிபுணர்மருத்துவர்ஷாபிக்கு எதிராக இந்தச் சட்டத்தரணி முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளதை அடுத்தே அவர் வழக்கில் முன்னிலையாகமுடியாதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றச் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக அவருக்கு அந்த வழக்கில் முன்னிலையாக உரிமை இல்லை என்று சுட்டிக்காட்டப்பதை அடுத்து, நேற்று முன்தினம் அவர் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சந்தேகநபர் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி நவரத்ன பண்டாரவால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதைஅடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. (எ-71)

## கோத்தபாயவுக்கு எவரும் எதிர்ப்புக் காட்டவில்லை

### மகிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக நியமிப்பதற்கு எமது தரப்புக்குள் எந்த எதிர்ப்புக்களும் காணப்படவில்லை. அவை அனைத்தும் வெறுமனே அவர் மீதுள்ள அச்சத்தின் காரணத்தால் வெளியிடப்படும் புனை கதைகளேயாகும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக நியமிப்பதற்கு உங்களுடைய தரப்புக்குள்ளேயே எதிர்ப்புக்கள் காணப்படுகின்றனவே என அவரிடம் வினவப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தரப்புக்குள் எந்த எதிர்ப்புக்களும் காணப்படவில்லை. அவை அனைத்தும் வெறுமனே அவர் மீதுள்ள அச்சத்தின் காரணத்தால் வெளியிடப்படும் புனை கதைகளேயாகும்.

எம்முடன் இருக்கும் அனைத்துத் தரப்பினரும் இணக்கப்பாட்டை எட்டியுள்ளார்கள். அதன் பிரதிபலிப்பைத் தேசிய மாநாட்டின் மேடையில் உங்களால் அவதானிக்க முடியும். எமது தரப்பானது, நாட்டை அழிக்கும் கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் தேசியபாதுகாப்பு, பொருளாதார அபிருத்தி, நிலையான சமாதானம் உள்ளிட்டவற்றைக் கவனத்தில் கொண்டு எதிர்காலம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவல்ல ஊழல் மோடிகள் அற்ற தலைமைத்துவதற்கு ஆதரவளிப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இலட்சணங்களைக் கொண்ட தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஒருநபராகக் கோத்தபாய ராஜபக்சவே காணப்படுகின்றார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அவரை யாரும் விமர்சிக்கவில்லை. அவரை ஆதரிப்பதென்றே அனைவரும் ஒருமித்து இணக்கம் வெளியிட்டுள்ளனர்- என்றார். (எ)

## கம்போடியாவில் வெகுவிரைவில் இலங்கைத் தூதரகம் உருவாகும்

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

கம்போடியாவில் இலங்கைத் தூதரகம் விரைவில் அமைக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அதுவரை இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்புச் செயற்பாடுகளுக்காக கொன்சியூலர் நாயகம் ஒருவர் செயற்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

கம்போடியத் தலைநகரிலுள்ள விகாரைக்கு வழிபாடுகளுக்குச் சென்றிருந்த போதே அரச தலைவர் இந்த விடயத்தைக் கூறினார் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பௌத்த தர்மம் தொடர்பில் தெளிவுபடுத்தும் செயற்றிட்டங்களுக்காக இலங்கை மற்றும் கம்போடியா ஆகிய இருநாடுகளும் அர்ப்பணிப்புச்செய்ய வேண்டும் என அரச தலைவர் குறிப்பிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு மற்றும் வர்த்தக செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது என்றும் அரச தலைவர் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு வருமாறு கம்போடியத் தலைமை அமைச்சருக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார் என்றும்- அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

## மைத்திரியை கோத்தா இந்தவாரம் சந்திப்பார்!



கொழும்பு, ஓக.12

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பொதுஜன பெரமுன) அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் மைத்திரியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பு இந்த வாரம் நடக்கும் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பை முக்கியமான அரசியல் விவகாரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இருவரும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே கூட்டணியை உருவாக்குவது தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# கோத்தபாயவை ஒருபோதும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

கோத்தபாய ராஜபக்ச மிகவும் கசப்பான உணர்வுகளை எமது மனங்களில் விதைத்துள்ளார். அவரைத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கை தலைவர்களைப் பொறுத்தவரை அவர்கள் அடிப்படைவாத சிந்தனையில் மூழ்கியுள்ளனர். பேரினவாத பிடிக்குள் இறுகியுள்ளனர். சிறுபான்மை மக்களும் இலங்கையில் வாழ்கின்றனர். அவர்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. இதனால் அறவழி போராட்டங்களும் ஆயுத போராட்டங்களும் நடைபெற்றன. நிரந்தரமான அரசியல் தீர்வை காண்பதன் முலமாகத்தான் தேசிய பொருளாதாரம் மற்றும் தேசிய ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்ற சிந்தனை அவர்களுக்கு வர வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்னும் கண்ணீருடன் வீதியில் நிற்கிறார்கள். இதற்கெல்லாம் பதில் கூறும் பொறுப்பு கோத்தபாய ராஜபக்சவுக்கு உண்டு. சிறுபான்மை மக்களின் வாக்குகள் இல்லாமல் தேர்தலில் வெற்றியடைவோம் என்று கொக்கரிப்போரை பார்க்கும் போது சிறுபான்மையினர் வெட்கமடைகின்றனர். கோத்தபாய ராஜபக்சவைப் பொறுத்தவரையில் பல்லின மக்களை நிர்வகிப்பதற்கான தகுதி அவரிடம் உள்ளதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட தீயவைகளுக்கு அவரும் ஒரு காரணம் என்பது தமிழ் மக்கள் மத்தியிலும், நடுநிலை சிந்தனையாளர்கள் மத்தியிலும் பேசப்படுகிறது - என்றார். (எ)

# கோத்தபாயவை எதிர்கொள்ளும் மக்கள் பலம் கொண்டவர் சஜித்

## அமைச்சர் அஜித் கூறுகின்றார்



கொழும்பு, ஓக.12

கட்சியில் பல தரப்பினரும் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

சாதாரண பொதுமக்களும் அதையே விரும்புகின்றனர். கோத்தபாய ராஜபக்சவை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி களமிறக்கினால் அவரை எதிர்கொள்ளும் மக்கள் ஆதரவு பெற்ற ஒரே நபர் சஜித் பிரேமதாசவே.

இவ்வாறு அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலும் சரி, மத்திய செயற்குழுவிலும் சரி சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் முன்மொழியப்படவே இல்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் குறித்து கலந்துரையாடப்படவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன். சஜித் பிரேமதாசவின் பெயர் மட்டுமே முன்னி லைப்படுத்தப்பட்டு பேசப்படுகின்றது.

அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறங்குவதற்கு தனிப்பட்ட முறையில் விருப்பம் கொண்டிருக்காத, எதிர்மறையான நிலைப்பாடுகளை வெளியிடும் சிலர் கட்சியினுள் உள்ளார்கள். அத்தகைய சிலராலே சஜித் பிரேமதாச மீது சேறு பூசம் நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால்தான் சஜித் பிரேமதாச வெற்றி பெறுவார், அனைவரின் ஆதரவையும் பெறுவார் என்பதை தெரிந்துகொண்டும் அவரைப் பெயரிடுவதில் தாமதங்கள் நிலவுகின்றன.

கூட்டணி அமைப்பதற்கான பேச்சு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பேச்சு முன்னேற்றகரமாகவே இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை பெயரிடப்படுவதோடு, சஜித் பிரேமதாசவுக்கும், கூட்டணிக் கட்சித்தலைவர்களுக்கும் இடையில் பேச்சு முன்னெடுக்கப்பட்டு இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே கூட்டணிக்கான கைச்சாத்து இடம்பெறவேண்டும் என்பது எமது நிலைப்பாடாக உள்ளது. சஜித் பிரேமதாசவின் இணக்கப்பாட்டின்மையுடனும், மத்திய செயற்குழுவின் அனுமதியின்றியும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கான யாப்பு அமைக்கப்பட்ட காரணத்தால் தான் அவர் பொதுச்செயலர் பதவியைக் கோரியிருந்தார்.

பொறுப்புக்கூறுவதிலிருந்து விலகிநிற்கும் தனியொரு நபருக்கு அதிகாரங்கள் வழங்குவது தவறானது என்ற ஜனநாயகச் சிந்தனையுடன் தான் அவ்வாறானதொரு நிபந்தனையை சஜித் விதித்திருந்தார். தற்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க புதிய கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வைப் பிற்போட்டுள்ளதுடன், யாப்பை மறுசீரமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாசவும் புதிய கூட்டணியில் பங்கேற்கும் தரப்புக்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார். ஆகவே அந்த நிபந்தனை தற்போது அவசியமில்லை. அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படுகின்றபோது, புதிய கூட்டணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நபர் ஒருவருக்கே பொதுச்செயலர் பதவியை வழங்க வேண்டும்-என்றார். (எ)

### வடக்கு நிலஅபகரிப்பு விடயத்தில்

# ரணில் விக்கிரமசிங்க பொய்தான் கூறுகிறார்

## ரவிகரன் சாடுகிறார்

முல்லைத்தீவு, ஓக. 12

வடக்குப் பகுதியில் அபகரிப்புக்கள் இடம்பெறவில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அப்பட்டமாகப் பொய்யுரைக்கின்றார் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெறும் ஆக்கிரமிப்புகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றில் அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கில் அபகரிப்புக்கள் இடம்பெறவில்லை எனவும், அபிவிருத்தி வேலைகளே இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்திருந்தார்.

தலைமை அமைச்சரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கருத்து வெளியிடும்போது ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய்ப் பகுதி கமக்கார அமைப்பினருடன் சேர்ந்து நான் சென்று பார்வையிட்ட இடங்கள் முழுவதுமே அபகரிப்புகள் செய்யப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

பல வடிவங்களில் இன்றைய அரசு நில அபகரிப்பைச் செய்துகொண்டிருக்கின்றது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நில அபகரிப்புக்கள் வடக்கில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அபகரிப்புகள் இடம்பெறவில்லை என்று தலைமைஅமைச்சர் கூறும் கருத்துப் பொய்-என்றார். (த-246)

# தமிழ் மக்களின் தலைவர்கள் 4 வருடங்களை வீணாக்கினர்

## இன்னொரு சந்தர்ப்பமாக 4 மாதங்களேயுள்ளன சிவசக்தி ஆனந்தன் எம்.பி. இடித்துரைக்கிறார்

வவுனியா, ஓக. 12

2015ஆம் ஆண்டிலிருந்த இதுவரையான 4 வருடங்களையும் சரியான முறையில் பயன்படுத்த தமிழ்த் தலைவர்கள் தவறிவிட்டார்கள். மீண்டும் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை எப்படி நாங்கள் பயன்படுத்தப்போகின்றோம் என்பதே சவாலானது, முக்கியமானது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளை அலுவலகம் வவுனியா மன்னார் வீதி கற்பகபுரம் பகுதியில் நேற்று முற்பகல் திறந்துவைக்கப்பட்டது. அந்தக் கட்சியின் ஏற்பாட்டில் திறப்பு விழா நடைபெற்றது. அதன் பின்னர் கட்சியின் ஏற்பாட்டில் இளைஞர் வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு -கிழக்கில் பல்லாயிரக்கணக்கான இளையோருக்கு வேலை இல்லாத பிரச்சினை இருக்கிறது. ஆனால் எங்களுக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பங்களை எவ்வளவுக்கு நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம் என்பது தொடர்பில் விமர்சனத்துக்கு உட்படுத்த வேண்டும்.

2015ஆம் ஆண்டு எங்களுக்குக் கிடைத்த ஒரு பொற்காலம். இந்த நான்கு வருடங்கள் காலம் எங்கள் மக்களின் அரசியல் உரிமைக்காக அல்லது எங்களுடைய இளையோருக்கு வேலைவாய்ப்புக்காக அல்லது போரால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த மக்களுடைய விடுதலைக்காக எவ்வளவு தூரம் காத்திரமாக தமிழ்த் தலைமைகள் ராஜதந்திர ரீதியாக நடந்திருக்கிறார்கள் என்பது பல்வேறு பட்ட விமர்சனத்துக்கு உட்பட்ட பிரச்சினையாக இருக்கிறது.

மீண்டும் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன. அரசதலைவர் தேர்தல் தமிழர்களுடைய கைகளிலேயே தங்கியுள்ளது. நாங்கள் அளிக்க போகும் ஜனநாயக ரீதியான இந்த வாக்குரிமை தான் இந்த நாட்டின் அரச தலைவரைத் தீர்மானிக்கும். ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தை எப்படி நாங்கள் பயன்படுத்தப்போகின்றோம் என்பது சவாலானது.

2015ஆம் ஆண்டு எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம். ஆனால் எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் பணத்துக்கான ஒரு ஆட்சி மாற்றமாகத் தான் அது நடைபெற்றது. ஒரு சில கட்சிகளையும் ஒரு சில நபர்களின் நலனைக் கருத்தில் கொண்டே அந்த ஆட்சி மாற்றம் நடைபெற்றிருக்கிறது.

ஆகவே இன்றைக்கு எங்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே விக்னேஸ்வரனுடைய தலைமையில் இருக்கக்கூடிய நாம் மற்றும் எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகள் அதேபோல தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்களால் பகிரங்கமான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு செல்லக்கூடிய பல்வேறுபட்டவர்களும் இணைந்து செயற்பட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. நாங்கள் மாற்றுத் தலைமைக்குத் தள்ளப்பட்டமைக்கான காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடந்த காலத்திலே விட்ட தவறுகளும் தற்போது விட்டுக் கொண்டிருக்கும் தவறுகளுமே.

ஆகவே தமிழ் மக்களுக்குப் புதிய மாற்று அரசியல் தலைமை ஒன்று தேவை. மக்களுடைய அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமக்கு கிடைத்திருக்கக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்-என்றார். (த-110)

# மைத்திரியைத் தவிர்க்கின்றார் அமெ. உதவி இராஜாங்க செயலர்

கொழும்பு, ஓக.12

இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான பதில் உதவி இராஜாங்க செயலர் அலிஸ் வெல்ஸ், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க மாட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலிஸ் வெல்ஸ் அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். கொழும்பில் தங்கியிருக்கும் போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகளையும் வணிக சமூகத்தினர், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்திருந்தார். எனினும், அலிஸ் வெல்ஸ் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கமாட்டார் எனக் கூறப்படுகிறது. கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ள போதும், அவருக்கு அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலருடன் எந்தச் சந்திப்பு நிகழ்ச்சி நிரலும் இல்லை என அரச தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)

# வடக்கில் தென்பகுதியினர் நியமனம்: எமது இளையோர் தத்தளிக்கின்றனர்

*அமைச்சர் சஜித்திடம் சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு*

சாவகச்சேரி, ஓக. 12
தென்பகுதியில் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் தென் பகுதியைச் சேர்ந்தவர்களை வடக்கில் காணப்படும் அரசவேலைவாய்ப்புகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். இதனால் எமது பகுதி இளையோர் வேலை வாய்ப்பின்றித் தத்தளிக்கின்றனர்.




இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
கொடிகாமம் மந்துவிலில் இடம்பெற்ற திருவேரபுரம் மாதிரிக் கிராம வீடுகள் கையளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மைவிருந்தினராக வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்துகொண்டிருந்தார். அதில்விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் அனைவரும்சமத்துவமாகநடத்தப்படுவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில்வடக்கிலுள்ளஇளையோர்வேலைவாய்ப்பை வழங்குவதற்குப் பதிலாக அந்த இடங்களுக்கு தென் பகுதியிலிருந்து ஆள்களைநியமிப்பதுதவிர்க்கப்படல் வேண்டும்.
வடக்கில்அழிவடைந்தமூன்றுதொழிற்சாலைகளைமீண்டும்சீரமைத்துஎமது இளையோர்வேலைவாய்ப்பைவழங்குமாறு அரசிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். ஆனையிறவு, உப்பளம், ஒட்டுசுட்டான், ஓட்டுத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை போன்றவற்றைச் சீரமைத்து வேலை வாய்ப்பின்றிக் காணப்படும் நூற்றுக்கணக்கான இளையோருக்கு வேலைவாய்ப்பைவழங்கவேண்டும் என்றுகோரியிருந்தோம். பட்டதாரிகள் நியமனத்தில் கூட வெளிவாரி பட்டதாரிகள்புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குறைபாடுகளை அமைச்சர் சஜித் சீர்ப்படுத்தவேண்டும்.
அமைச்சர் சஜித் பிரேமதாச துடிப்பான ஒரு செயல் வீரர் என்பதை நாம் நன்கறிவோம். அவரின் வேகத்துக்கு எம்மால் ஈடுகொடுக்க முடியாது. நடப்பதிலும் சரி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதிலும் சரி அவரால் மேற்கொள்ளப்படும்நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. அவரின்தந்தைவழியில் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றி வருகிறார். அவரது முயற்சியால் இந்திய அரசிடமிருந்து நிதியைப்பெற்றுவடக்கில்வீடமைப்புத் திட்டங்களைஉருவாக்கிச்செயற்படுத்தி வருகிறார்.
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரால் அழிவடைந்த ஆயிரக்கணக்கான வீடுகள் இன்னமும் முழுமை செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்துச் சீரமைத்து வழங்க வேண்டும் - என்றார். (த-9)

## வவுனியாவில் விபத்து ஒருவருக்கு காயம்!

வவுனியா, ஓக. 12
வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.50 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
வவுனியாநகரில் இருந்து குருமன்காடு நோக்கிச் சென்ற உந்துருளி, ஆதி விநாயகர் ஆலய குளக் கட்டு வீதியில் திரும்ப முற்பட்ட வேளை அதே திசையில் பின்னால் வந்த மற்றொரு உந்துருளியுடன் மோதி விபத்துக்குள்ளா னது. இதில் ஒருவர் காயமடைந்தார். (ம-110)

## இராணுவ ரக் மோதியதில் தேரர் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.12
இராணுவ ரக் வண்டியில் மோதியதில் தேரர் ஒருவர் (வயது-36) படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு அநுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவிலுள்ள வெலியா சந்திக்கு அருகில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
பாதையில் பயணித்துக் கொண்டிருந்தபோது மோதியே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
படுகாயமடைந்த தேரர் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
இந்தத் தேரர் பண்டுகாபயபுர ரஜமகா விகாரையில் பணியாற்றி வந்தவர் என்று கூறப்படுகின்றது. (எ)



## பலத்த காற்றால் கூரை வீசப்பட்டது

கிளிநொச்சி, ஓக. 12
கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் கடந்த வெள் ளிக்கிழமை வீசிய பலத்த காற்றுக் காரணமாக வீட்டின் கூரை தூக்கி வீசப்பட் டது. அங்கு தனிமையில் இருந்த தாயார் பாதுகாப்பாகத் தப்பினார்.
நாட்டில் தற்போது பலத்த காற்று வீசி வருகின்றது. இது பற்றிய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், மேற்குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. சில நாள்களுக்கு முன்னர் வவுனியாவில் இது போன்ற இடர் ஏற்பட்டிருந்தது. (த-6)

## ஐ.தே.கவை ஒருபோதும் சம்பிக்க பிரிக்கவில்லை

*மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.12
அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஐக்கிய தேசியக் கட்சியை பிரிக்கும் வகையில் ஒருபோதும் செயற்படவில்லை என்று கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான மரிக்கார் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம்கொழும்பில்இடம்பெற்றநிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜாதிகஹெலஉறுமயவின்பொதுச்செயலர் பாட்டளி சம்பிக்க ரணவக்க என்பவர் ஒரு திறமையான அரசியல்வாதி. அவர் புத்தாக்க சிந்தனையுள்ள ஒருவர். அவர் ஒருபோதும் ஐ.தே. கட்சியை பிரிக்க முயற்சிக்கவில்லை. அவ்வாறு கூறப்படுவது பொய்யாகும் - என்றார். (எ)

## நாவற்குடாவில் கோர விபத்து இருவர் சாவு; ஒருவர் காயம்

கொழும்பு, ஓக.12
மட்டக்களப்பு - கல்முனை முதன்மை வீதி, நாவற்குடா விவேகானந்த விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஒருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
குருநாகலில் இருந்து காத்தான்குடிக்கு கல் ஏற்றிக்கொண்டு பயணித்த கனரக வாகனத்தின் ரயர் வெடித்து சடுதியாக வேகம் குறைந்து நிறுத்தப்பட்ட போது, ஏறாவூரில் இருந்து காத்தான்குடிக்குக் கோழிகளை ஏற்றிகொண்டு பின்னால் வந்த கன்ரர் வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
கோழிகளை ஏற்றி வந்த கன்ரர் ரக வாகனத்தில் இருந்த மூவரில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மற்றவர் படுகாயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்தில் ஏறாவூர் ஹிஸ்புல்லா நகர், ஆர்.டி. எஸ். வீதியைச் சேர்ந்த டி மனாப் (வயது - 28), ஏறாவூர் கலைமகள் பாடசாலை முன்வீதி யைச் சேர்ந்த ஹிஸ்மி ஹசன் (வயது - 25) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்த ஹிஸ்மி ஹசனின் சகோதரான் றிஸ்மி (வயது - 20) என்பவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதேவேளை, உயிரிழந்தவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்துத் தொடர்பான விசாரணை களைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)



## தேர்தலில் எவருக்கு ஆதரவு: த.மு.கூ. மிக விரைவில் முடிவு

கொழும்பு, ஓக.12
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி எவருக்கு ஆதரவு வழங்கும் என்பது தொடர்பாக வெகு விரைவில் அறிவிக்கப்படும் என்று மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம்பூண்டுலோயாவில்நடைபெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இதுவரை காலமும் மலையகத்தில் இருந்த அமைச்சர்கள், தலைவர்கள் மலையகத்தைப்பற்றிபேசிகொண்டுஇருந்தார்களே தவிர இதுபோன்றகிராமங்களைஅமைத்து கொடுக்கவில்லை. நான்அமைச்சராகவந்த பிறகு தான் ஏழு பேர்ச் காணியில் பத்து லட்சம் ரூபா செலவில் இந்த தனி வீட்டு திட்டத்தை மேற்கொண்டு வருகிறேன்.
எவர்என்னை, எந்தவகையில்விமர்சித்தாலும் நான் மேற்கொள்ளும் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுதான் இருப்பேன்.
50 ரூபா கொடுப்பனவை கட்டாயம் பெற்றுத் தருவோம். ஆனால் 20ரூபாவை பெற்றுக் கொடுத்தவர்கள் கூறுகிறார்கள் - நான் மக்களை ஏமாற்றுகின்றேன் என்று - நான் ஒருபோதும் மலையக மக்களை ஏமாற்றமாட்டேன். நான் சொல்வதை செய்பவன்-என்றார். (எ)

# கட்சிக் கூட்டத்துக்கு பொலிஸாரால் தடை

வடமராட்சி ஓக.13

'புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி' எனும் அமைப்பினால் நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டம் பொலிஸாரால் நிறுத்தப்பட்டுள்ளது. முன்னாள் போராளிகளது வாழ்வாதாரம் மற்றும் சமகால அரசியல் நிலமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வல்வெட்டித்துறை - பொலிகண்டி ஊரணி கடற்கரையோரத்தில் நேற்று இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. எனினும் வல்வெடித்துறைப் பொலிஸார் அதனைத்தடைசெய்துள்ளதுடன் நிகழ்வில் பங்குபற்ற வந்த வர்களையும் திருப்பியனுப்பியதாகவும் நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுவினரை சில மணித்தியாலங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகவுள்ளது. எனவே அந்த அமைப்பின் பெயரில் அரசியல் செய்வதற்கு அனுமதி வழங்க முடியாது என நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவிடம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியதாக ஏற்பாட்டுக் குழுவினர் உதயனிடம் தெரிவித்தனர்.

எனினும் தமது கட்சி 2016 ஆம் ஆண்டு இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டதாகவும், வடமாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் இந்த நிகழ்வைக் கடந்த நாள்களில் நடத்தி வந்ததாகவும் நேற்றும் (நேற்று முன்தினம்) வடமராட்சியில் பருத்தித்துறைப் பகுதியில் நடத்தியதாகவும், ஆனால் வல்வெட்டித்துறையில் மாத்திரம் நிகழ்வு தடைசெய்யப்பட்டதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் தெரிவித்தனர். (136)

## ஆயிரம்...

லுவார். இது உறுதி. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவே களமிறங்குவார் என முன்னணியின் புதிய தலைவரான மகிந்த ராஜபக்ச நேற்று அறிவித்துள்ளார். இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்று எமது கட்சியின் செயற்குழு விரைவில் தீர்மானிக்கும்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கும் கோத்தபாய ராஜபக்ச எமது கட்சிக்கு சவால் அல்ல. அவரின் உண்மை முகத்தை தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் நன்கு அறிவார்கள்.

அரச தலைவர் தேர்தல் பரப்புரை மேடையில் என்னதான் ஆட்டம் போட்டாலும், கோத்தபாய ராஜபக்சவால் வெல்வது கடினம். ஆயிரம் கோத்தபாயாக்கள் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரே தேர்தலில் வெல்லுவார். இது உறுதி. பன்னாட்டுச் சமூகத்தின் மட்டத்தில் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியவர்கள் தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்குகின்றார்கள். இவர்களுக்கு நாட்டு மக்களே தங்கள் வாக்குகளினால் பாடம் புகட்டுவார்கள் - என்றார். (ஒ,5,22)

## கோத்தபாய...

மனிதர் அல்ல. இவ்வாறு முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இந்திய ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

**கேள்வி** சிறுபான்மையினர் உங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

மகிந்த ஆம்! என்ன நடந்தது என்பதை தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அமைச்சரவையில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் குறைந்தபட்சம் ஏதாவது செய்கிறார்கள், ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை, அவர்கள் தங்களை மட்டுமே கவனித்துக் கொள்கிறார்கள். முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறைந்தபட்சம் அரசை எதிர்க்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தன், சுமந்திரன் போன்ற தலைவர்கள் அரசை ஆதரிக்கின்றனர், ஆனால் அவர்கள் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள், அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு தமிழர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்வேன். கோத்தபாய ஒரு மோசமான மனிதர் அல்ல, அவர் ஒரு செயல் மனிதர், அவர் பலவற்றைப் பேசிக் கொண்டிருப்பவர் அல்ல, அமைதியாக செயற்படுகிறார். அவர் அரச தலைவராகவும், நான் தலைமை அமைச்சராகவும் இணைந்து, மக்களுக்கு இப்போது தேவையானதை வழங்க முடியும். மக்கள் அதை அறிந்திருக்கிறார்கள்.

13 ஆவது திருத்தம் இருந்தபோதிலும் இப்போது சட்டம் ஒழுங்கு இல்லை, ஜனநாயகம் இல்லை, மாகாண சபைகளுக்கு தேர்தல் இல்லை. தற்போதைய அரசு துன்புறுத்தல்கள் மற்றும் வழக்குத் தொடருவதிலும், எனது அரசுடன் தொடர்புடைய நபர்களைப் பழிவாங்குவதிலும் மட்டுமே கவனமாக இருந்தது. இலங்கைக்குப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை நாங்கள் வழங்குவோம், மேலும் இந்தியாவுடன் நல்ல உறவை உறுதி செய்வோம் என்று புதுடில்லிக்கு தெரியும்.

**கேள்வி** கோத்தபாய மீது போர்க்குற்றச்சாட்டுகள் உள்ளன என்று?

மகிந்த அவை எல்லாம் அரசியல் (குற்றச்சாட்டுகள்). உண்மையில் போரை வழிநடத்திய சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க முடிந்தால், அதனை அப்போது ஆதரித்த தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியுற்ற விதத்தைப் பார்த்து இப்போது எங்களை ஏன் ஆதரிக்க மாட்டார்கள்? - என்றார். (ஒ,5)

## மகிந்தவை...

கொழும்பு, ஓக. 12

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை அவசர அவசரமாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான முதன்மைப் பிரதி உதவிச் செயலர் அலைஸ் வெல்ஸ்.

விஜயராம மாவத்தையிலுள்ள மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுப் பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி டெப்பிளிட்ஸ், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நிறுவுநர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவை அறிவிப்பதற்கு முன்னதாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ஒ.5,22)

## இலங்கையின்...

கொழும்பு, ஓக. 12

நாம் எல்லா நாடுகளுடனும் நட்புறவை பேணுவதற்கு தயாராக உள்ளோம். ஆயினும், நாம் எந்தவொரு நாட்டுக்கும் எமது இறையாண்மையை காட்டிக்கொடுப்பதற்கு தயாராக இருக்கமாட்டோம். இராஜதந்திர உறவுகளின்போது, எந்தவொரு வெளிநாட்டுக்கும் முன்னே அடிபணியாத, நாட்டின் இறைமையை எப்போதும் பாதுகாக்கும், எந்தவொரு நாட்டுடனும் சம மட்டத்தில் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்வோம். கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளைச் சரி செய்து கொள்வோம். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவருமான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் எதிர்கால அரசியலில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்குவதற்குரிய மக்கள் சார்பான, முற்போக்கு சக்திகளால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட யுகத்தின் பணியாகவே இன்றைய வேட்பாளர் நியமனத்தைப் பார்க்கின்றேன். இந்த தீர்மானத்தை எடுப்பதற்கு மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நான் தலை வணங்குகிறேன்.

கடந்த காலம் முழுவதும் நாட்டுக்காக குரல் எழுப்பிய மகா சங்கத்தினருக்கும், சமய மதகுருமார்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், தேசிய அமைப்புகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், சமூக வலைதளங்களை பயன்படுத்துநர்களுக்கும், நாட்டின் இளைய தலைமுறையினர் முதன்மையாகக் கொண்டு பொது மக்களுக்கும், நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பொறுப்பை நிறைவேற்றுவேன்**

நான் எந்து நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாட்டைப் பற்றி பெருமிதம் கொள்கின்றேன். எனக்கு எனது நாடு பற்றிய எதிர்கால நோக்கு உள்ளது. இலங்கை வாழ் மக்களுக்கும் தலைமைத்துவம் வழங்கி, தாய் நாட்டுக்கு சந்தோசம் மற்றும் சுபீட்சம் என்பவற்றை மலரச் செய்வதற்கு கிடைக்கப் பெறும் இந்த வாய்ப்பை நான் மிகவும் மெச்சுகின்றேன். ஒப்படைக்கப்படும் எந்தவொரு பொறுப்பையும் உயர் மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் தயங்காத நான், மக்கள் முன்னிலையில் இன்றுள்ள சவாலை வெற்றியடைய செய்வதற்குத் தயாராக உள்ளேன், என்பதை உங்கள் முன்பாக மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன். எனது 20 ஆண்டு தரைப்படை சேவையிலும், ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு அண்மித்த காலப் பகுதியில் அரச உத்தியோகத்தராகவும் சேவையாற்றும்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் வெற்றிகரமாக நிறைவேற்றினேன். நான் எப்போதும் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை வரையறையலுக்குள் உட்படாது, அங்கீகாரங்களுக்கு அப்பால் சென்று அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துள்ளேன்.

**பயங்கரவாதம் ஒழிப்பு**

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு அண்மித்தக் காலப் பகுதியில் நடைபெற்ற பயங்கரவாதத்தை மூன்றரை ஆண்டுகள் போன்ற குறுகியகாலப்பகுதியில் முடிவுறுத்துவதற்கு, முப்படைத் தளபதியான அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குத் தேவையான மூலோபாய மற்றும் நிர்வாக ஒத்துழைப்பை வழங்குவதற்கு, எனக்கு இயன்றதற்கான காரணம் அப் பண்பு என்னிடம் இருந்தமையாகும்.

அதே போன்று பின்னரான காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலராக, கொழும்பு நகரத்தை ஆசியாவின் வேகமாக முன்னேற்றம் அடைந்து வரும் நகரமாக உருவாக்குவதற்கும், நகரத்தின் தொடுவான ரேகையை மாற்றியமைக்கும்; மனம் கவரும் பல முதலீடுகளை கொண்டு வருவதற்கும், முடிந்தமைக்கான காரணம், நான் ஒருபோதும் வரையறைகளுக்குள் உட்படாது பொறுப்புக்களை நிறைவேற்றியமையாகும்.

**வெளிசக்திகளுக்கு அடிபணியேன்**

அன்று நாட்டுக்காக எனது பொறுப்புக்களை நிறைவேற்றும்போது, எந்தவொரு வெளியக சக்திகளும் அதற்கு தடையேற்படுத்துவதற்கு நான் இடமளிக்கவில்லை. எனது நாட்டை எதிர்பவர்களுக்கு நான் ஒருபோதும் தலை வணங்கியதில்லை. எதிர்காலத்திலும் எனது தாய் நாட்டின் இறையாண்மைக்கு பாதகம் ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டேன்.

நீங்கள் எதிர்பார்க்கும் தலைமைத்துவத்தை அளிக்கும் ஆற்றல் எனக்குள்ளது என்பதை நான் தற்போதும், எனது செயற்பாடுகள்மூலம் உறுதிப்படுத்தியுள்ளேன். நாட்டில் முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எமது அரசின் முதலாவது கடமைப் பொறுப்பு. எமக்கு மீண்டும் இந்த நாட்டை உலகத்தில் பாதுகாப்பான நாடாக உருவாக்க முடியுமென நான் மிகவும் நம்பிக்கையுடன் கூறுகின்றேன். உங்களதும், உங்களது பிள்ளைகளதும் பாதுகாப்பின் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

**மதச் சுதந்திரம்**

பௌத்த தத்துவ கோட்பாட்டினுள் எமக்கு, எல்லா சமயங்களுக்கும் மதிப்பளிக்கும்படி கற்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்த எழுத்திலான வரலாற்றைக் கொண்டுள்ள எமது நாட்டில் பல்வேறு இனத்தவர் வாழ்கின்றார்கள். அவர்கள் பல்வேறு சமயங்களை வழிபடுகின்றனர்.

நாம் எப்போதும் ஒவ்வொருவரினது சமயத்திற்கு மதிப்பளித்து ஒவ்வொருவரினது கலாச்சார விழுமியங்களுக்கு மதிப்பளித்து நற்புறவுடன் வாழ்ந்த இனமாகும். எமது பலமாக அந்த ஒற்றுமை இருத்தல் வேண்டும். நான் ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு இடமளிக்க மாட்டேன்.

**வடக்கு மக்களின் பிரச்சினையை தீர்ப்பேன்**

அதே போன்று வடக்கு மக்களுக்கு தேவையான, எதிர்பார்ப்புகள் பற்றி எமக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது. அவர்களின் இந்தப் பிரச்சினைகளை எமது அரசால் உறுதியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2015 - 2014 ஆகிய காலப் பகுதிகளில் மகிந்த சிந்தனை கொள்கையின்கீழ் எமது நாட்டில் பெரிய அபிவிருத்தி ஏற்பட்டது. தற்போது நாம் அதிலிருந்து நாட்டை முன் கொண்டுச் செல்லுதல் வேண்டும்.

அதற்காக தற்கால உலகளாவிய பொருளாதார செல்நெறிகளுடன் எனது நோக்கை ஒன்றிணைத்து எதிர் காலத்துக்குத் தேவையான, புதிய திட்டங்களை சமர்ப்பிப்பேன்.

மக்கள் நேயத்துடன்கூடிய, வினைத்திறனுடனான அரச சேவையை உறுதிப்படுத்தல் அரசின் அடிப்படை பொறுப்பாகும். அதற்கு முதலாவதாக, அரச உத்தியோகதர்களை அரசியல் செல்வாக்குகளிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும். தமது கடமைப் பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றுவதற்கு தீர்மானங்களை மேற்கொள்கின்ற, நேர்மையான அரச உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆகக்கூடிய சட்டத்துடனான பாதுகாப்பை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இன்று வீதியில் செல்கையில், வாகனங்களை ஓட்டும் போது, குப்பை கழிவுகளை அகற்றும் போது, மகளிரை கவனிக்கும் முறை பற்றி அவதானிக்கும்போது பண்பாடுகளில் வீழ்ச்சி காணப்படுகிறது. ஏனையோர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் வாழ்தல் எல்லா பிரசைகளினதும் கடமையாகும். மக்கள் எதிர்பார்க்கின்ற அந்த ஒழுக்கமுடைய சமூகத்தை உருவாக்குவதற்கு நாம் பணியாற்றுவோம். அதற்கான முன்மாதிரியை நாட்டின் தலைமைத்துவத்தால் வழங்கப்படுதல் வேண்டும். வரலாற்றில் எமது நாடு பிரசித்தி பெற்றது போல் மகளிருக்கு அச்சமின்றி எந்தவொரு இடத்திலும், எந்தவொரு நேரத்திலும் தனியாக பயணிக்க முடியுமானவாறு நாட்டை நாம் கட்டியெழுப்புவோம். பல்வேறு விபத்துகளுக்கு உள்ளாகியுள்ள படையினர், சிவில் குடிமக்கள் மற்றும் பிறக்கும்போதே சிறப்புத் தேவைகள் உள்ள குடிமக்கள் மீது நாம் என்றும் கவனம் செலுத்தினோம்.

**சுதந்திரப் போராட்டம்**

இன்று முதல் நாம் இலங்கை வரலாற்றில் மற்றுமொரு வகையிலான சுதந்திரப் போராட்டத்தை தொடங்குகின்றோம். அந்த நோக்கதின் பொருட்டு, மேற்கொள்கின்ற தேர்தல் இயக்கத்தையும், நாம் மிகவும் மதிப்பான முறையில் மேற்கொள்ளுதல் வேண்டும். எமது முழுமொத்த தேர்தல் இயக்கத்தையும் ஒழுக்கத்துடனும், சட்டத்தை மதிக்கும் வகையிலுமான, தேர்தல் இயக்கமாக பேணிச் செல்லுதல் வேண்டும். இந்த தேர்தல் இயக்கத்தில் எப்போதும் சுற்றாடல் பாதுகாப்புக்கு முதலிடம் வழங்குவோம். பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் உபயோகமற்ற தேர்தல் இயக்கம் ஊடாக ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் முன்மாதிரியாக திகழ்வோம். அரசியல் எதிரிவாதிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும், தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை மேற்கொள்கின்ற பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் தேர்தல் கலாசாரத்தை நாம் மாற்றுவோம். எமது எதிரிவாதிகளின் பிழையான கருத்துகளுக்கு தர்க்கரீதியாக, உண்மையாக பதில் வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். இன்று எமது நாட்டில் வாக்காளர் அரசியல் ரீதியாக நெகிழ்வுத் தன்மை மிக்கவராக உள்ளார். இன்று நாட்டில் இளைய தலைமுறையினர் மிகவும் அறிவுத் திறன் கொண்டவர்களாக உள்ளார்கள். பொய்யால் உண்மையை வேறுபடுத்தி இனங் காணுவதற்கு அவர்களுக்கு ஆற்றல் உள்ளது. இன்று நாட்டுக்குத் தேவையாக உள்ள நீங்கள் அனைவரும் கேட்கும், அந்த தேசிய கடமையை நிறைவேற்றுவதற்கு நான் தயாராக உள்ளேன் - என்றார். (ஒ,5)



## மிக உயரமான ஏரி

காத்மாண்டு,ஒக.12
நேபாளத்தில்புதிதாகஏரிஒன்றுகண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஏரி, உலகின் மிக உயரமான இடத்தில் உள்ள ஏரி என்ற சாதனைப் பட்டியலில் இடம்பெறும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. நேபாளத்தின் மனாங்மாவட்டத்தில்உள்ளஇமயமலைப்பகுதியில்கடல்மட்டத்தில் இருந்து 4ஆயிரத்து 919 மீற்றர் உயரம், 4 கிலோ மீற்றர்நீளம், 1.2 கிலோமீற்றர் அகலம், 200 மீற்றர் ஆழத்தைக் கொண்டமைந்த திலிச்சோ ஏரியே இதுவரை உலகிலேயே மிக உயரமான இடத்தில் உள்ள ஏரியாகக் கருதப்பட்டு வந்தது.

இந்தநிலையில், மனாங்மாவட்டத்தின் மலைப்பகுதியில்கடந்தசிலமாதங்களுக்கு முன்பு, மலையேற்றக் குழுவினரால் கஜின் சாரா என்ற ஏரி கண்டறியப்பட்டது. இந்த ஏரியானது, கடல்மட்டத்தில் இருந்து சுமார் 5ஆயிரத்து 200 மீற்றர் உயரத்தில் உள்ளதாக அங்கு சென்ற குழு கணித்துள்ளது.

ஆனால், அது அதிகாரபூர்வமாகக் கணக்கிடப்படவில்லை. இந்த ஏரிக் கடல் மட்டத்தில் இருந்து 5ஆயிரம் மீற்றருக்கு மேல் உள்ளமை உறுதி செய்யப்பட்டால், இதுவே உலகிலேயே மிக உயரமான இடத்தில் உள்ள ஏரி என்ற புதிய சாதனை படைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தான்சானியாவில் சோகம்
# வெடித்துச்சிதறியது எரிபொருள் லொறி
## 60 பேர் சாவு! 70 பேருக்கு மேல் காயம்



ர் இஸ்சலாம்,ஒக.12
மத்திய ஆபிரிக்கநாடானதான்சானியாவில் எரிபொருள் பாரவூர்தி வெடித்துவிபத்துக்குள்ளானதில் 60 பேர் சாவடைந்தனர்.

தான்சானியாவின் தலைநகரான டர் இஸ்சலாமிலிருந்து 200 கிலோமீற்றர்தொலைவில்உள்ளமோரோகோரா எனும் இடத்தில் இந்தச் சம்பவம் நடந்தது.

குறித்த எரிபொருள் பாரவூர்தியிலிருந்து எரிபொருள் வெளியாகியதால்அந்தஎரிபொருளைச்சேகரிப்பதற்காகமக்கள்கூடினர். அப்போது அந்தபாரவூர்திதிடீரெனவெடித்தது. இதில் ஏற்பட்ட தீயில் சிக்கி எரிபொருள் எடுப்பதற்குக் குவிந்தவர்களில் 60 பேர் சாவடைந்தனர்.

70 பேர் வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம்குறித்துவிசாரணை நடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேபோன்றதொரு எரிபொருள் பாரவூர்திவெடித்து விபத்துக்குள்ளானதில் நைஜீரியாவில் கடந்த மாதம் 50பேர்சாவடைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

# அணுச் சோதனையில் விபத்து
*ரஷ்யாவில் 5 பேர் சாவு*



மொஸ்கோ,ஒக.12
ரஷ்யாவை அண்மித்த ஆர்க்டிக் பெருங்கடல்பகுதியில்அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் அதிநவீன ஏவுகணையை ரஷ்யா பரிசோதித்தது. அப்போது ஏற்பட்ட விபத்தில் 5 பேர் சாவடைந்தனர். ரஷ்யாவின் வடமேற்கான ஆர்க்டிக் பெருங்கடல் பகுதியை ஒட்டியுள்ளவெள்ளைக்கடலின்அருகாமையில்நியோனோக்ஸாபரிசோதனை மையத்தில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. அதிநவீன ஏவுகணையைப் பரிசோதிக்க மேற்கொண்ட முயற்சியே இவ்வாறு விபத்தில் முடிந்தது. அணு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் ஏவுகணையைத் தரையில் இருந்து விண்ணை நோக்கி உயர்த்தும்இயந்திரத்தில்ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தால் சோதனை நடைபெற்ற பகுதியிலிருந்துசுமார்100சதுரகிலோமீற்றர் தூரத்துக்கு கதிர் வீச்சுப் பரவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# சீனாவைத் தாக்கியது 'லெகிமா'
*13பேர் சாவு 16பேரைக் காணவில்லை*

பீஜிங்,ஒக.12
எச்சரிக்கைவிடுக்கப்பட்டதைப்போன்று'லெகிமா'புயல்சீனாவின்கிழக்குப் பகுதிகளைத் தாக்கியது. இந்தப் புயலில் சிக்கி 13 பேர் சாவடைந்ததாகவும் 16 பேர் காணாமல்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் கிழக்குப் பகுதியைத் தாக்கிய லெகிமா புயலால் வென்சுவா மாநகராட்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. புயலைத் தொடர்ந்து கனமழை மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது.

புயல் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருவதாகஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன. இந்தப்புயல்காரணமாக அன்ஹு, ஜிலங்சூ, ஷாங்காய் ஆகிய பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருகிறது. கிழக்குப்பகுதிகளில்அதிகம்வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கானமக்கள்தங்கள்இருப்பிடங்களிலிருந்துஇடம்பெயர்ந்து நிவாரணமுகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர். 2014ஆம்ஆண்டுக்குப் பிறகு சீனாவைத் தாக்குகின்ற சக்தி வாய்ந்த புயலாக 'லெகிமா' புயல் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.





# மியன்மாரில் கடும் மழை; நிலச்சரிவால் பலர் சாவு

யாங்கூன்,ஒக.12
மியன்மாரில் கடும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவால் 34பேர் சாவடைந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மழைமற்றும்வெள்ளத்தால்பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ளமோன்மாநிலத்தின்மலைப் பகுதியில் உள்ள தாப்யோ கோன் கிராமத்தில்பெய்தகனமழையால் நேற்றுப் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் அந்த கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் சிக்கிக்கொண்டனர்.

நிலச்சரிவில் சிக்கிய 28 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 22 பேர் சாவடைந்தனர். இதைவிட மற்றொருபகுதியில் 12பேர்சாவடைந்தனர். இதனால்அங்குநிலச்சரிவில் சிக்கிச்சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 34ஆகஉயர்ந்துள்ளது.

மேலும்பலர்நிலச்சரிவுக்குள்சிக்கியிருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில், மியன்மாரில் இன்னும் ஓரிரு நாள்களுக்கு மழை நீடிக்கக் கூடும் என அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த சில நாள்களாக அங்கு கொட்டித் தீர்த்து வருகின்ற மழை காரணமாக இன்னும் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும்நிலச்சரிவுகள்ஏற்படும் அபாயங்களும்தோன்றியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

# ஏமன் போரில் பலர் சாவு கவலை தெரிவித்தது ஐ.நா.



சனா.ஓக.12
ஏமனில் அரச படைகளுக்கும் ஆயுததாரிகளுக்கும் ஏற்பட்ட மோதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு ஐ.நா. கவலைதெரிவித்தது. ஈத் பண்டிகையின்போது இத்தகைய துயரங்கள் தேவைதானா என்றும் ஐ.நா. மேலும் கேள்வியெழுப்பியது. ஏமனின் இரண்டாவது நகரமான ஏடனில் கடந்த நான்கு நாள்களாக நடந்துவரும் போரில் ஏராளமானோர்கொல்லப்பட்டுள்ளனர். இதுகுறித்துஐ.நா. மனிதாபிமானஒருங்கிணைப்பாளர்லிஸ்கிராண்டேதெரிவித்ததாவது:
குடும்பங்கள் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் ஒன்றாகக் கூடி மகிழும் பண்டிகையாக ஈத் விளங்குகிறது. இந்தக் கொண்டாட்ட தினத்தில் இப்படியொரு துயரம் தேவைதானா? மகிழ்ச்சியாகஇருக்கவேண்டியமனநிலைக்குப் பதிலாக தங்கள் அன்புக்குரியவர்களின் சாவுக்கு இரங்கல் தெரிவிக்கும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எங்கள் முக்கிய கவலை இப்போது காயமடைந்தவர்களை மீட்பதற்காக மருத்துவ குழுக்களை அனுப்புவதாகும். வீடுகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் உணவுக்காகவும் தண்ணீருக்காகவும்அலைகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டால்மேலும்கவலைஏற்படுகிறது-என்றார்.

**பின்னணி**
தென்மேற்குஆசியநாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர்மன்சூர்ஹைதிக்குஆதரவாகச் சவூதி அரேபியா செயற்படுகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

# மீண்டும் ஏவுகணைச் சோதனை வடகொரியா தொடராக அதிரடி

## *அமெ.-தென்கொரியாகூட்டுப்பயிற்சிக்குப்பதிலடி*

பியோங்ஜாங்.ஓக.12
குறுகிய தொலைவு வரை சென்று தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஏவுகணைகள் இரண்டை ஏவியது வட கொரியா.
இந்த ஏவுகணைகள், தெற்கு ஹேம்கியாங் மாகாணத்தில் ஹொம் ஹங் நகரில் இருந்து ஏவப்பட்டுள்ளன. அவை. 400 கிலோ மீற்றர் தொலைவுக்குச் சென்று, கொரியத் தீபகற்பத்தில் இருந்து கிழக்காக ஜப்பான் கடலில் போய் விழுந்துள்ளன. கடந்த 2 வாரங்களில் 5ஆவது முறையாக வடகொரியா ஏவியுள்ள ஏவுகணைகள் இவையாகும். வடகொரியாவின் அதிரடியான இந்தத் தொடர் ஏவுகணைச் சோதனைகள்உலகநாடுகளை அதிர வைத்துள்ளன.
இந்த ஐந்தாவது ஏவுகணைச் சோதனை குறித்து வடகொரிய குறிப்பிடும்போது இது, அமெரிக்கா தென்கொரியா ஆகிய நாடுகள் மேற்கொண்டு வரும் கூட்டுபோர்ப்பயிற்சிக்கு எதிராகப் பரிசோதிக்கப் பட்டுள்ளதுஎன்றது.



ஹொங்கொங் விவகாரம்

# “சீனஅடக்குமுறைசெய்கிறது”

## *ஹொங்கொங்கில் குடும்பமாகப் பேரணி*

ஹொங்கொங்.ஓக.12
ஹொங்கொங்கில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாகத் தங்களையும் இணைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் குடும்பம் குடும்பமாகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹொங்கொங்கில் நடந்து வந்த போராட்டம் குறித்துச் சீனா வெளியிட்ட கருத்தை எதிர்க்கும்முகமாகவும், போராட்டக்காரர்களுக்கு ஆதரவளிக்கும் விதமாகவும் குழந்தைகளுடன் குடும்பம் குடும்பமாக மக்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணி மிகவும் அமைதியாக நடந்தது. பலூன்கள்மற்றும்குழந்தைகளைஏற்றிவரும்தள்ளுவண்டிகளும் நிறைந்துஏதோவிழாக்கோலம்போல வண்ணமயமாகஇந்தப்பேரணிகாட்சியளித்தது. “எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும். அவர்கள் காக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாங்கள் குடும்பம் குடும்பமாக இதில் கலந்துகொண்டோம்” என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.



**பின்னணி**
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின்குற்றவாளிகளைச் சீனாவில்நீதிநடவடிக்கைகளுக்குஉட்படுத்தும்வகையிலானசட்டத்திருத்தத்தைக்ஹொங்கொங் நிர்வாகம்கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஹொங்கொங் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் நடத்திய பெரும் போராட்டத்தில்ஹொங்கொங்முடங்கியது. குறித்த தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார் ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகி கோரிலாம். அதை முற்றாகக் கைவிடுமாறு கோரிப் போராட்டங்கள் தொடர்ந்தன. சமீபத்தில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. ஹொங்கொங் விடயத்தில் பொறுமை காக்க முடியாது என்று சீனா எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்தது.
போராட்டக்காரர்களை இனந் தெரியாதநபர்கள்தாக்கினர். இந்தநிலையிலேயே தற்போது ஹொங்கொங் மக்கள் குடும்பத்துடன் வீதியிலிறங்கியுள்ளனர்.



# இன்றைய நாள்

**மேடம்:** சமூக நிகழ்வுகள் அதிருப்தி தரலாம். சுய அந்தஸ்து பாதுகாப்பதில், உரிய கவனம் வேண்டும்.தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும்.

**இடபம்:** பிறருக்கு உதவுவதால் மறைமுக சிரமம் ஏற்படலாம்.செயல்கள் நிறைவேற சுறுசுறுப்பு அவசியம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். முக்கிய செலவுக்கு கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் புதிய நம்பிக்கை ஏற்படும். தொழில் வளம் பெற இஷ்ட தெய்வ அருள்பலம்துணை நிற்கும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் சிறிய முயற்சியும், அதிக வெற்றியைத் தரும்.விலகிச் சென்ற நண்பர் விரும்பி அன்பு பாராட்டுவார்.தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** வழக்கத்துக்கு மாறான பணி தொந்தரவு தரலாம்.தொழில், வியா பார நடைமுறை சீராக நண்பரின் உதவி கிடைக்கும்.நிர்பந்தத்தின் பேரில் பொருள் வாங்க வேண்டாம்.

**கன்னி:** உங்களின் யதார்த்த பேச்சு, பிறர் மனதை சங்கடப்படுத்தும்.தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும்.புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம். மருத்துவ சிகிச்சை உடல் நலம் பெற உதவும்.

**துலாம்:** உயர்ந்த எண்ணங்களை செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவீர்கள்.உபரி பண வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் பொது பிரச்சினையில் கருத்து சொல்ல வேண்டாம்.இதனால், இருக்கிற நற்பெயரை பாதுகாத்துக் கொள்ளலாம். திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் பணிபுரிவீர்கள்.

**தனுசு:** உங்கள் உழைப்பின் அருமையை நண்பர், உறவினர் பாராட்டுவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடம் உருவாக்கும்.மனசாட்சிக்கு முக்கியத்துவம் தந்து செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணிபுரிவது அவசியமாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் செயற்படுவீர்கள்.தொல்லை கொடுத்தவர் இடம் மாறி போவர். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**மீனம்:** செயல்களில் நேர்மையை பின்பற்றுவீர்கள்.பலரும், உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர்.தொழில், வியாபார வளர்ச்சி சீரான முன்னேற்றம் தரும். கூடுதல் பணவரவு கிடைக்கும். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள்.

# ஆவரங்கால் மத்தி. கரப்பந்தில் மகுடம்



யாழப்பாணம், ஒக. 12
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:21, 26:24, 25:18 என்ற செற் கணக்கில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-23)

## தாச்சித் தொடரில் காந்தி சாதித்தது!

யாழ்ப்பாணம், ஓக. 12
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரில் காந்தி சனசமூக நிலைய ஏ அணி கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் காந்தி சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து காந்தி சனசமூக நிலைய பி அணி மோதியது. இதில் காந்தி சனசமூக நிலைய ஏ அணி 5:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## உலகக் கிண்ணத்தை நடத்த இந்தியாவுக்கு புதுச் சிக்கல்

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஆண்டு வருவாயில் இந்தியக் கிரிக்கெட் வாரியத்துக்கு பகிரப்படும் தொகை பெரிய அளவாக இருப்பதால், அதைக் குறைக்க ஐ.சி.சி. முடிவெடுக்கப் போவதாக அச்சுறுத்தியதையடுத்து இந்திய கிரிக்கெட் வாரியம் பிரிட்டன் சட்ட நிறுவனம் ஒன்றை உதவிக்கு நாடியுள்ளது.
இந்தியாவில் நடைபெறும் உலக கிரிக்கெட் நிகழ்வுகள் அனைத்துக்கும் முழு வரிவிலக்கு கோருகிறது ஐ.சி.சி. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சட்டக் குழு சி.ஓ.ஏ.விடம் வரிவிலக்குகளுக்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று ஐ.சி.சியிடம் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளது.
ஆனால் ஐ.சி.சி. பொறுமைக் காக்கத் தயாராக இல்லாததால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வருவாய்ப் பகிர்விலிருந்து இந்தத் தொகையை கழித்து வரிச்சலுகைத் தொகையை மீட்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.
இந்த மோதல் மேலும் வலுத்து வரும் நிலையில், 2021ஆம் ஆண்டு நடைபெறும் ரி20 தொடர், 2023ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத் தொடர் ஆகியவற்றை இந்தியாவில் நடத்துவதைத் தவிர்க்க ஐ.சி.சி. முடிவெடுத்துள்ளது என்று தெரிய வருகிறது. (ம)

International Cricket Council VS

## நான்காம் இடம் கேட்கவில்லை என்கிறார் ஸ்ரேயாஸ்



எந்த இடத்தில் களமிறங்கி விளையாடவும் தயார் என்று தெரிவித்தார் இந்திய அணியின் இளம் வீரர் ஸ்ரேயாஸ்.
நான்காவது இடத்தில் தன்னைக் களமிறக்கும்படி ஸ்ரேயாஸ் கோரிக்கை வைத்தார் என்று சில கருத்துக்கள் வெளிவந்திருந்த நிலையில், அத்தகைய கருத்துக்களை மறுத்துள்ளார் ஸ்ரேயாஸ்.
அணிக்குள் இடம்பிடிப்பதில் எனக்கும் பன்ட், ராகுல் ஆகியோருக்கு இடையே போட்டி இருப்பது எனக்கு எந்தவிதமான கருத்தும் இல்லை. எவர் அணியில் இடம் பெற வேண்டும் என்று முடிவு செய்வது அணி நிர்வாகம்தான் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## றெயின்போ சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக. 12
வல்வை விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் றெயின்போ அணி கிண்ணம் வென்றது.
நேதாஜி அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய றெஜின்போ அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நேதாஜி 54 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-23)



## நேதாஜி கழகம் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக. 12
வல்லைவக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேதாஜி அணி கிண்ணம் வென்றது.
தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நேதாஜி அணியை எதிர்த்து சைனிங்ஸ் அணி மோதியது.
ஆட்டத்தின் முதலாவது நிமிடத்தில் நேதாஜி அணியின் சார்பாக தருண் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 17ஆவது நிமிடத்தில் சைனிங்ஸின் சார்பாக மற்றொரு கோல் பதிவானது. இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்திருந்த நிலையில் முதல்பாதி முடிவுக்கு வந்தது.
இரண்டாம் பாதியின் 35ஆவது நிமிடத்தில் நேதாஜி அணியின் சார்பாக தர்சன் கோலொன்றைப் பதிவுசெய்தார்.
முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது நேதாஜி. (ம-23)

## தோப்பு வாலிபர் வி.கழகம் கரப்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக. 12
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் கிண்ணம் வென்றது அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகம்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதியது.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்நது. முதலாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது காமாட்சி அம்பாள் அணி. சரிவில் இருந்து மீண்ட தோப்பு வாலிபர் அணி அடுத்த மூன்று செற்களையும் 25:22, 25:22, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## மொகமட் செசாட்டின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவு காண்கின்றதா?



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான மொகமட் செசாட் உடனான ஒப்பந்தத்தை அந்த நாட்டு கிரிக்கெட் சபை திரும்பப் பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளரும், அதிரடி தொடக்க வீரருமானவர் முகமது செசாட். இவர் ஆப்கானிஸ்தான் மட்டுமல்லாமல் பிற நாடுகளில் நடைபெறும் கிரிக்கெட் லீக் ஆட்டங்களிலும் விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு சார்ஜாவில் நடைபெற்ற 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரில் 16 பந்துகளில் 74 ரன்கள் குவித்து மிகவும் பிரபலம் அடைந்தார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற 2019ஆம் ஆண்டுக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி சார்பில் செசாட் பங்கேற்றார். உலகக்கோப்பை தொடரில் இரண்டு ஆட்டங்களில் விளையாடிய செசாட் காயம் காரணமாக தொடரில் இருந்து விலக்கப்படுகிறார் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்தது.

ஆனால், தான் உடல் நலத்துடன் இருப்பதாகவும் கிரிக்கெட் வாரியம் தனக்கு எதிராகச் செயற்படுவதாகவும் செசாட் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். இது கிரிக்கெட் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்தே அவருடனான ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை. (ம)



# நபோலியை வென்றது பார்சிலோனா கழகம்!

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வென்றது பார்சிலோனா விளையாடுக் கழகம்.

நபோலியை எதிர்த்து பார்சிலோனா பலப்பரீட்சை நடத்தியது. முதல் பாதியில் இரண்டு அணிகளும் உச்சக்கட்டப் போராட்டத்தை வெளிப்படுத்தின. இதனால் கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் ஆட்டம் எழுச்சி பெற்றது. சுவாரஸ் 48ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 56ஆவது நிமிடத்தில் கிரீஸ்மன், 58ஆவது நிமிடத்தில் சுவாரஸ், 63ஆவது நிமிடத்தில் டெம்பிலி ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா அணி. (ம)



## கிரீஸ்மனின் முதல் கோல்

பார்சிலோனா அணிக்காக தனது முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பிரான்ஸ் வீரர் அன்ரோனியோ கிரீஸ்மன்.

கடந்த பல ஆண்டுகளாக ஸ்பெய்னின் அத்லெட்ரிகோ மட்ரிட் அணிக்காக விளையாடி வந்தவர் கிரீஸ்மன். 2019 - 2020 பருவகாலத்துக்காக அவரை அத்லெட்ரிகோ மட்ரிட்டில் இருந்து வாங்கியது பார்சிலோனா. இந்தப் பரிமாற்றத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவை பார்சிலோனா செலவிட்டது. இதனால் கிரீஸ்மனின் தனிநபர் பெறுபேறு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. இந்த நிலையில் நபோலிக்கு எதிராக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் கிரீஸ்மன். (ம)



## இந்தியக் கிரிக்கெட் வீரர்களுக்கும் இனி ஊக்கமருந்து சோதனைகள்

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களை இனிமேல் எந்த இடத்தில் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் ஊக்கமருந்து சோதனையை தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு (என்ஏடிஏ) நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு (பி.சி.சி.ஐ) இனிமேல் வேறு வழியில்லாமல் நாடா எனப்படும் தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்புக்கு கட்டுப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுவரைக்கும் சுவீடனைச் சேர்ந்த பன்னாட்டு ஊக்கமருந்து சோதனை மேலாண்மை நிறுவனம்தான் கிரிக்கெட் வீரர்களிடம் இருந்து சிறுநீர், குருதி மாதிரிகளை சேகரித்து, தேசிய ஊக்கமருந்து சோதனை கூடத்துக்கு அனுப்பி வந்தது. இனிமேல் பன்னாட்டு நிறுவனம் தலையிடாது. தேசிய ஊக்கமருந்து தடுப்பு நிறுவனமே அந்தப் பணியைச் செய்யும். சுவீடனைச் சேர்ந்த குறித்த நிறுவனம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




## மட்ரிட் வென்றது

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி போராடி வெற்றிபெற்றது.

மட்ரிட்டை எதிர்த்து ஸ்லஸ்பேர்க் இந்த ஆட்டத்தில் மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் பென்சிமா கொடுத்த பந்துபரிமாற்றத்தைக் கோலாக மாற்றினார் ஹசார்ட். அதன் பின்னர் வேறெந்தக் கோலும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யவில்லை.

**இதையடுத்து முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)**



# இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் இங்கிலாந்த அணி அறிவிப்பு

## மொயின் அலி அதிரடி நீக்கம்

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக் கிடையில் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிண்ணத் தொடர் இடம்பெற்று வரு கின்றது.

இதில் முதலாவது போட்டி இடம்பெற்று முடிந்த நிலையில் ஆஸ்திரேலியா அணி அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில் தோற்றுப் போன இங்கி லாந்து அணி லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் மீண்டெழுந்து பதிலடி கொடுக்க முழுமு னைப்புடன் உள்ளது.

இதனையடுத்து அந்த அணியில் சகலதுறை ஆட்டக்காரர் ஜோப்ரா ஆர்ச்சர் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். ஜாக் லீச் சுழற்பந்து வீச்சாளர் இணைக்கப்பட்டு மொயின் அலி அதிரடியாக நீக்கப்பட் டுள்ளார்.

எட்ஜ் பாஸ்டன் டெஸ்ட் சொதப்பினார் மொயின் அலி.

மேலும் இரண்டு இன்னிங்ஸ்களிலும் நாதன் லயனிடம் ஆட்டமிழந்து ஆஸ்திரே லியாவுக்கு எதிராக 11 முறை ஆட்டமிழந் தார். இதில் 9 முறை நாதன் லயன் இவரை வீழ்த்தியிருக்கிறார்.

ஜாக் லீச் அயர்லாந்துக்கு எதிராக சொதப்பிய இங்கிலாந்து அணியின் 2ஆவது இன்னிங் ஸில் இறங்கி 92 ஓட்டங்களை எடுத்து ஆட் டநாயகன் விருதைப் பெற்றார்.

2ஆவது டெஸ்ட்டுக்கான இங்கிலாந்து அணி விவரம்:

ஜோ ரூட், ஜோப்ரா ஆர்ச்சர், ஜானி பேர்ஸ்டோ, ஸ்டுவர்ட் பிராட், ரோரி பர்ன்ஸ், ஜோஸ் பட்லர், சாம் கரண், ஜோ டென்லி, ஜேக் லீச், ஜேசன் ராய், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ்.

SLAS
Open/Limited
P.உமாசங்கர்&வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 8
விசேட விரிவுரை
பொது அறிவும் நுண்ணறிவும்
14/08/2019 புதன்
9am- 4.30 pm
"எதிர்பார்க்கை விடயங்களுடன்"
NEC
076 166 1988, 077 741 7143


SLAS
Open/Limited
P.உமாசங்கர்&வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 7
S.அன்ரன் பெரேரா
பொது அறிவு
இலங்கை உலக போக்குகள், பல்தேர்வு கட்டமைப்பு கட்டுரை வினாவிடை
12/08/2019 திங்கள்
9 am- 4.30 pm
"எதிர்பார்க்கை விடயங்களுடன்"
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143

Job Vacancies
* Admin Secretary
* Marketing Executives
Send your CV to below address on or before 16-08-2019
ICS Study Abroad
77,Clock Tower Road, Jaffna
sutha@icssrilanka.com



## மரண அறிவித்தல்

# நித்தியானந்தராசா சிறிகாந்தன்



தோற்றம் 17.07.1954

மறைவு 10.08.2019

யாழ். அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், கதிரமலை சிவன்கோயிலடி சுன்னாகத்தை நிரந்தர வதிவிடமாகவும் கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தராசா சிறிகாந்தன் நேற்றுமுன்தினம் (10.08.2019) சனிக்கிழமை சுன்னாகத்தில் தனது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தராசா - நாகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், சாரதாதேவியின் பாசமிகு கணவரும், அனுசியா (கனடா), சசி (இலங்கை), சறூன் (பிரான்ஸ்), லோறன்ஸ் (கனடா), தர்சன் (கனடா), பிரசாந் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தரஞ்சிதமலர் (இலங்கை), ஆனந்தஜோதி (கனடா), சிறிபவன் (கனடா), ஆனந்தசொரூபினி (லண்டன்), சிறி மோகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிர்மலாதேவி (இலங்கை), லலிதாதேவி (பிரான்ஸ்), சிறிபாஸ்கரன் (இலங்கை), ஜெயபாஸ்கரன் (லண்டன்), தவபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொபின் (கனடா), சிவா (இலங்கை) ஆகியோ ரின் மாமனும், அட்சயா (கனடா), பிருந்தாவன் (இலங்கை) தரண்யா (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2019) செவ் வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**சிவன்கோயிலடி,**
**சுன்னாகம்.**

(cs.27321) (13)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.